ஸுபத்ரார்ஜுனா.

இந்த

புராண ஸம்பந்தமான தமிழ் நாடகம்

டி. வேங்கடராம ஐயரால்

இயற்றப்பட்டது.

கும்பகோணம்

"யதார்த்தவசனீ அச்சுக்கூடத்தில்"

பிரசுரிக்கப்பெற்றது.

1924.

[காபிரைட்டும், ஸகலரைட்டுக்களும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது.]

விலை அணா 8.

ஸுபத்ரார்ஜுன.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 NOV 1924

அங்கம்—1.

ஸீன் 1.

[இடம் :—இந்திரப்ரஸ்தத்தில் பாண்டவர்களின் அரண்மனை வாயில்.]

(கோட்டைவாயிலில் இரண்டு பாராக்காரர்கள் பாராக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் : ஒரு ப்ராம்மணன் அதிவேகமாய் வருகிறான்.)

ப்ரா. அப்பா! ஸர்வாபீஷ்ட ஸித்திரஸ்து! அரசன் ஸமயமெப்படி? நான் இப்பொழுதே பார்க்கவேண்டும்.

மு. பாரா : ஸ்வாமி! இது ஸமயமல்ல பார்ப்பதற்கு :

ப்ரா : இது ஸமயமல்லவா! அடே! ப்ரஜைகளுக்கு ஆபத்து நேர்ந்தால் அதற்கு ஸமயம் பார்க்க முடியுமா? இஃதென்ன துர்யோதனன் ராஜ்யமா? ஆஹா! தர்மமே அவதாரமென்று சொல்லக்கூடிய, தர்மபுத்திரர் ராஜ்யமல்லவா இது? அதி பராக்ரமசாலிகளாகிய நான்கு ஸகோதரர்களால் ஸம்ரக்ஷிக்கப்பட்ட யுதிஷ்டிரர் ராஜ்யத்திலா இவ்வக்ரமம் நடக்கும்? ஐயோ! பரம்பரையாக பாதுகாக்கப்பட்ட ப்ராம்மணன் பசுக்களைப் பஞ்சமாபாதகர்களாகிய திருடர்கள் அபஹரித்துக்கொண்டு போய்விட்டார்களே! இவைகளைத் தவிர வேறு ஐவேஜியே எனக்குக் கிடையாதே! ஐயோ! இனி எவ்வாறு நான் அக்னிஹோத்திரம் செய்வது— அடே! உங்களுக்கு இரக்கம் வரவில்லையா இன்னும்? ப்ராம்மணன் பசுக்களைப் பரிகொடுத்து பரிதபிக்கிறான் என்று போய்ச் சொல்லுங்களடா?

இ. பாரா : சஸ்! கூச்சல்போடாதேயும் இங்கே.

ப்ரா :- ஆ! என்ன செய்வேன்! ஐயோ! த்ரிலோகங்களையும் ஹுங்கார சப்தத்தாலேயே நடுங்கச் செய்து, முஷ்டியால் நாசஞ்செய்யக்கூடிய ப்ரபாவத்தையுடைய பீமன் பலம் எங்கே போய்விட்டது? ஒரே பாணத்தால் ஈரேழு பதினுன்கு உலகங்களையும் கதறவடிக்கும் ப்ரபாவமுள்ள காண்டீபனது கைவலிமை எங்கே போய்விட்டது? அச்வினீ புத்ரர்களும் அஸஹாய சூரர்களுமான நகுல ஸஹதேவர்கள் தொட்டிலில் தூங்குகின்றார்களா என்ன?

மு. பாரா : என்னய்யா! நாங்கசொல்றது காதிலேபடலே உமக்கு?

ப்ரா : ஐயோ! (வயிற்றிலடித்துக்கொண்டு) நான் முறையிடுகிறது உங்கள் காதிலே விழவில்லையா? நாஞ கத்துகிறேன்? பறிகொடுத்த வயிற்றெரிச்சலன்றோ கத்தச்சொல்லுகிறது. ஐயோ! இவ்வளவு நாழிகை அவர்கள் வெகுதூரம் போய்விடுவார்களே; என்ன செய்வேன்! ஹே! பீமா! ஹே! அர்ஜுனு! ஏழை ப்ராம்மணன் கதறுகிறேனே!

(அர்ஜுனன் பரபரப்புடன் வெளியில் வருகிருன்.)

அர் : (அவரை வணங்கி) ஆ! ப்ராம்மணேத்தமா? அடியேனை மன்னித்தருளல் வேண்டும். என்ன நேர்ந்தது தாங்கள் இவ்வளவு துக்கத்தை அடையும்படி? எதுவாயிருந்தாலும் உரையுங்கள், கவலையை விடுத்து!

ப்ரா : அர்ஜுன ராஜனே! என் பசுக்களையெல்லாம் திருடர்கள் அபஹரித்துச் செல்வதால், அதை அறிவிக்க வந்த என்னை இக்காவலாளிகள் தடுக்க, வேறு வழியொன்றும் தோன்றாது உறக்கக் கத்தினேன். ஐயோ! உங்கள் ராஜ்யபாரத்தில்கூட இம்மாதிரி ஏற்படலாமா?

அர் : ஸ்வாமி! இவ்வளவுதானே! சீக்கிரத்தில் அவைகளை அடைவீர்கள் : அஞ்சவேண்டாம்.

ப்ரா : அர்ஜுனு! அத்திருடர்கள் அடவிக்குள் நுழைந்து மறைவதற்குள் மறித்துப் பிடிக்கவேண்டுமே?

அர் : அதைப்பற்றி தாம் கவலைபடைய வேண்டியதில்லை. அப்படியே அவர்கள் அகப்படாவிட்டாலும், தங்களுக்குப் பசுக்கள் தானே வேண்டும்—அபஹரிக்கப்பட்டவை எவ்வளவு பசுக்கள் ?

ப்ரா : ஐயோ அர்ஜுநா ! அப்படி வேறே பசுக்கள் வாங்கிக் கொள்வதாயிருந்தால் நான் ஏன் இந்த அர்த்த ராத்திரியில் வந்து அலறுகிறேன். அர்ஜுநா ! அவைகள் தலைமுறை தத்துவமாக இருந்து வருகின்றன. அவைகளில்லாவிட்டால் முதலில் என் ஸம்ஸாரம் ப்ராணனை விட்டுவிடுவாள். ஆகவே—

அர் : ஸ்வாமி ! தாங்கள் அவைகளையே பெறுவீர்கள். கவலையடையாதீர்கள். இதோ ! ஆயுதசாலை சென்று என் ஆயுதங்களை எடுத்து வருகிறேன். க்ஷணம் பொறுங்கள்.

[உள்ளே போய்விடுகிறான்.]

(அர்ஜுனன் உட்சென்றவுடன் காவலர்களிருவரும் அவர் பாதம்பணிந்து)

மு. பா : சாமி ! தெரியாமே சொல்லிவிட்டோம். எங்களைக் காப்பாத்தணும் சாமி !

இ. பா : ஆமாம், சாமி !

ப்ரா : அப்பா ! உங்கள் பேரில் என்ன குற்றம் ! உங்களுக்கிட்ட கட்டளைப்படி நடந்தீர்கள். எழுந்திருங்கள் ; உங்கள்பேரில் எனக்குக் கோபமில்லை.

ஸீன் 2.

இடம் :—சயனக்ரஹம்.

[ஓர் மஞ்சத்தில் தர்மபுத்ரரும் த்ரௌபதியும் படுத்துறங்குகிறார்கள். அர்ஜுனன் ஆயுதங்களை அணிந்துகொண்டு அவ்வழியாக வேகமாக வருகின்றான். தன் ஸகோதரரையும் த்ரௌபதியையும் பார்த்து, திடுக்கிட்டு தான் தவறி வந்ததை எண்ணி வருந்தியவண்ணம் வெளியிற் போய் விடுகிறான்.]

ஸீன் 3.

இடம் :—கோட்டைவாயில்.

[பாராக்காரர்கள் முன்போல் நிற்க ப்ராம்மணன் கீழே வீற்றிருக்கிறார். அர்ஜுனன் துக்காக்ராந்தனாய் வெளியில் வருகிறான்.]

அர். (தனக்குள்) ஆஹா! இப்படியா முடிந்தது. "அவஸரக்காரனுக்கு புத்திமட்டு" என்று சொல்வதுபோல், நான் வருகிற அவஸரத்தில், சயனக்ரஹம் என்று யோஜியாது அதன் வழியாகவல்லவோ வந்துவிட்டேன். நாரத பகவானால் ஏற்படுத்தி வைக்கப்பட்ட வ்யவஸ்தைப்படி, நானிப்பொழுது ஒருவருஷம் தீர்த்த யாத்திரையல்லவோ செய்யவேண்டும். ஐயோ! இந்த ஸமயம் என் ப்ராதாக்கள் என்னைவிட்டிருக்க ஸம்மதியார்களே! மேலும், அவ்வஞ்சகன், துர்யோதனன் இதை அறிந்துகொண்டால், இன்னுமென்ன இடையூறுகள் செய்ய எண்ணுவானோ? உம்—விதியை வெல்ல யாராலாகும்? எது நேர்ந்தபோதிலும், அதை அனுபவித்தேதான் தீரவேண்டும்.

ப்ரா. அர்ஜுனா! நிரம்ப நாழிகை ஆகிறதே. பிறகு—

அர். ஸ்வாமி! அக்கவலையேன் தமக்கு? அவர்கள் எங்கு சென்றாலென்ன? பாதாளத்தில் பதுங்கினாலென்ன? ஆகாயத்தில் மறைந்தாலென்ன? தனஞ்ஜயன் தனுஸுக்குத் தப்புபவனுமுண்டோ இத்தரணியில்?

ப்ரா. ஆமாம், அதிலென்ன ஆக்ஷேபனை. இல்லை, காலாகாலத்தில் சென்றால் அதிக ச்ரமம் இருக்காதே யென்று பார்த்தேன்.

அர்: ஸ்வாமி, வாருங்கள்: அவர்கள் போன திசையை மாத்திரம் காட்டிவிட்டு, நீங்கள் உமது க்ரஹத்திற்குப் போங்கள்.—வாருங்கள்.

[இருவர்களும் போகிறார்கள்.]

ஸீன் 4.

இடம் :—அந்தணர் வீதி.

(அர்ஜுனன் பின்றொடரப் ப்ராம்மணன் வருகிறான்.)

அர்: ஸ்வாமி! தங்களுடைய பசுக்களும், கன்றுகளும் ஒன்றுகூட குறையாமல் இருக்கின்றனவா?

ப்ரா: எல்லாமிருக்கிறதப்பா. உனக்கு ஸர்வ மங்களமுண்டாகட்டும்: உங்களுக்குக் கிடைக்கவேண்டிய ராஜ்யங் கிடைத்து ஸகல வைபவங்களுடன் இருப்பீர்கள்.

அர்: தங்கள் ஆசிர்வாதம், ஏங்கள் பாக்யம். ஸ்வாமி! நானின்றே தீர்த்த யாத்திரைக்குப் புறப்படவேண்டுமாதலால் எனக்கு விடையளிப்பீராக.

ப்ரா: ஏன்! என்ன விசேஷம், தீர்த்த யாத்திரை செய்ய?

அர்: ஸ்வாமி, நான் ஆயுதமெடுத்துவந்த அவஸரத்தில், என் முத் தண்ணுவின் சயனக்ரஹத்தின் வழியாக வந்துவிட்டேன்.

ப்ரா: அதனுலென்ன?

அர்: ஸ்வாமி, சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு ஸமயம் நாரத முனி வந்திருந்தார். அப்பொழுது எங்களுள் ஒவ்வொருவர்களும் ஒவ்வொருவருஷகாலம் முறையே த்ரௌபதியிடம் இருக்கவேண்டுமென்றும், அவரவர்கள் முறையில், அவரவர்கள் ஏகாந்தமாயிருக்கும் ஸமயம் வேறு யாவர் பார்க்க நேர்ந்தாலும் அவர்கள் ஒருவருஷகாலம் தீர்த்த யாத்திரை போகவேண்டும் என்றும், வ்யவஸ்தை ஏற்படுத்தியிருக்கிறார். அதன்படி நான் இன்று புறப்படப்போகிறேன்.

ப்ரா: அடாடா! என்னுலல்லவோ உங்களுக்கு இக்கஷ்டம் வந்துவிட்டது?

அர்: அதனுலென்ன? ஸ்வாமி! தாங்கள் அதற்காக வருந்தவேண்டாம். எனக்கு உத்தரவளியுங்கள்!

ப்ரா: உம்—ஆமாம்: தீர்த்தயாத்திரைபோவதென்றால் தனியாகவா?

அர்: இல்லை: இல்லை: அனேக ப்ராம்மணர்களையும் அழைத்துப் போகப்போகிறேன்.

ப்ரா: அப்படியானால் நானும் வருகிறேனே?

அர்: தங்களுக்கு ஸவுகர்யமிருந்தால் என்னலாக்ஷேபணையில்லை.

ப்ரா: நன்னாயிருக்கு: எனக்கு ஸவுகரியமில்லாமலென்ன?

அர்: இல்லை—தங்களிடமிருக்கும் பசுக்களையெல்லாம் கவனிக்க வேண்டி, க்ரஹத்தை விட்டு வருவது கொஞ்சம் ச்ரமமாயிருக்குமே என்று யோஜித்தேன்.

ப்ரா: அது கிடக்கட்டும்! என் அகமுடையாள் ஆயிரம் ஊருக்குப் பார்த்துக்கொள்வாள்: அதைப்பற்றி கவலையில்லை.

அர்: அப்படியானால் ஸரி: இன்றே புறப்படத் தயாராகவேண்டும்.

ப்ரா: எனக்கு தயாரென்ன, மண்ணாங்கட்டியென்ன! அகத்துக்குப் போகவேண்டியது; மடிஸஞ்சியை எடுக்கவேண்டியது; கொடியிலிருக்கிற ஸோமனை எடுத்து மடிஸஞ்சியிலடைக்க வேண்டியது; பூஜை ஸம்படத்தையும் அதற்குள்ளே வைக்க வேண்டியது; விபூதி ஸம்படந்தான் இடுப்பிலேயே இருக்கு; அதிலே வேண்டுமானால் சுரைக்குடுக்கையிலிருக்கிற விபூதியில் கொஞ்சம் எடுத்து நிறைய அடைத்துக்கொள்ளவேண்டியது; அவ்வளவுதான்; "அடியே: அகத்தை ஜாக்கிறதையாய்ப் பார்த்துக்கொள்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட வேண்டியதுதானே, வேறென்ன!

அர்: ஸரி. அப்படியே செய்யுங்கள். நான் வருகிறேன்.

[போக யத்தனிக்கிறான்.]

ப்ரா: ஆம்ாம்—(அர்ஜுனன் நின்று திரும்புகிறான்) புறப்படுகிறதற்கு முன்னாலே, யாத்திரா தானம் என்று ஒன்று செய்து கொள்ளுகிற வழக்கம்.—

அர் : ஆம்: ஆம். சாஸ்திரப்படி எல்லாம் செய்தபின்புதான் புறப் படப்போகிறேன். நான் வரவா ?

ப்ரா : அப்படியானல், நானிதோ வந்துவிட்டேன்.

[ப்ராம்மணன் அதிவேகமாகப் போகிருர். அர்ஜுனனும் போகிருன்.]

அங்கம்—2.

ஸீன் 1.

இடம் :—ஹஸ்தினபுரத்தில் துர்யோதனன் மாளிகை.

(துர்யோதனனும் கர்ணனும் வீற்றிருக்கிருர்கள்.)

கர் : மஹாராஜா ! கொஞ்ச நாட்களாக தங்கள் மனம் ஏதோ கவலை யிலாழ்ந்திருப்பதாகக் காணப்படுகிறது. அது பாண்டவர்களை உத்தேசித்தா ? அல்லது வேறு எது என்று எனக்கறிவிக்க லாமோ ?

துர் : நண்பா ! இச்சமயம் என் கவலை பாண்டவர்களைப்பற்றி அல்ல.

கர் : பின் ?

துர் : த்வாரகையில் பலபத்ரர், இருக்கிருரல்லவா ?

கர் : ஆம்.

துர் : அவருக்கோர் அழகிய தங்கை இருக்கிருள் ; அவள் பெயர் ஸுபத்ரை : அவளது பேரழகைப்பற்றிக் கேட்டநாள்முதல் நான் இவ்வவஸ்தையிலிருக்கிறேன்.

கர் : மஹராஜ் ! கிருஷ்ணன் தங்கையா ?

துர் : ஆம்.

கர் : பலராமர் ஸம்மதித்தாலும் கிருஷ்ணன் குறுக்கிடுவானே.

துர் : அதனுல்தான் எனக்குக் கவலை அதிகமாகிறது. நண்பா! எல்லாவற்றிற்கும் மாமாவை வரவழைத்துக் கேட்போமா? அவர்தான் இதற்குத் தகுந்த யோஜனை சொல்வார்.

கர் : அப்படியே செய்கிறது.—(திரும்பி) அடே! யாரடா, அங்கே?

(ஒரு ஸேவகன் வந்து பணிகிருன்.)

விரைவில் சென்று சகுனி மாமாவை மஹாராஜா அழைக்கிருரென்பதாகச் சொல்லி அழைத்துவா சீக்ரம்.

(ஸேவகன் வேகமாகப் போகிருன்.)

துர் : நண்பா! ஒன்று செய்தாலென்ன?

கர் : என்ன?

துர் : கிருஷ்ணன் ருக்மணியை அபஹரித்ததுபோல் நாமேன் ஸுபத்ரையை அபஹரித்து வரக்கூடாது?

கர் : ஏன்? என்ன ப்ரமாதம், நானிருக்க? அப்படியே செய்து விடுவோம்.

[ஸேவகன் அதிவேகமாய் வந்து பணிகிருன்.]

ஸே : மஹராஜ்: மாமா அவர்கள் வந்துகொண்டிருக்கிருர்கள்.

துர் : ஸரி வரட்டும்—கர்ணு! மாமாவிடம் நீதான் சொல்லவேண்டும் இந்த ஸமாசாரத்தை.

கர் : ஏன், பேஷாய்ச் சொல்லுகிறேன்.

[சகுனி வருகிருன்.]

துர் : (எழுந்து, அவரை எதிர்கொண்டு) மாமா! வரவேண்டும்: வரவேண்டும்.—இதோ இவ்வாஸனத்தில் அமரவேண்டும்.

கர். : (எழுந்து) மாமா! நமஸ்கரிக்கின்றேன்.

சகு : (ஆஸனத்திலுட்கார்ந்து) அப்பா! உட்காருங்கள்.—துர்யோதனு! நீ வெகு அவஸரமாக என்னை அழைத்ததாகச் சொன்னுனே! என்ன விசேஷம் என் ஞாபகங்கூட வர?

துர்: என்ன மாமா, இவ்வாறு சொல்லுகிறீர்கள்! உங்களாலல்லவோ நான் இந்த ஸ்திதியிலிருப்பது. இவ்விராஜ்யத்தை ஆளும்படியான பாக்யம் பெற்றதே தம்மால் அல்லவா? அவ்வாறிருக்க நான் ஸதா தங்களையே நினைத்துக்கொண்டிராது எப்படியிருக்கக்கூடும்?—மாமா! தங்களுக்கென்ன குறைவு ஏற்பட்டது இவ்வாறுரைக்க?

சகு: அட பயித்யமே! எனக்கென்ன குறைவேற்படப்போகிறது, நீ இருக்கும்வரை? அவைகளெல்லாம் ஒன்றுமில்லை?

துர்: பின் ஏன் மாமா இவ்வாறு உரைத்தீர்கள்?

சகு: என்ன சொன்னேன்! உனக்கென்ன மனக்கவலை ஏற்பட்டது என் ஞாபகம் வர என்றேன்.

கர்: அதாவது? காரியமிருந்தால்தான் மாமா ஞாபகம் வரும், என்று சொல்வதுபோலல்லவா இருக்கிறது?

சகு: ஊஹூ ஹூ: அப்படியில்லை: அவச்யமான கார்யமில்லாவிட்டால், வயஸான மாமாவை வீண் தொந்தரை செய்வானேயென்றிருக்கலாம்—ப்சு: அதுபோகட்டும் துர்யோதனா! என்ன விசேஷம்? ஏதோ அவஸரமான கார்யம் என்றனே? (துர்யோதனன் மௌனமாயிருப்பதைப் பார்த்து) என்ன ஒன்றும் பதிலைக்காணோம்!—

கர்: மாமா! அவருக்கறிவிக்க லஜ்ஜையாயிருக்கிறதுபோல் தோன்றுகிறது; நான் சொல்லவா?

சகு: யார் சொன்னாலென்ன? என்ன அப்பேர்ப்பட்ட விசேஷம்?

கர்: ஒன்றுமில்லை—பலபத்ரருக்கோர் தங்கை இருக்கின்றனளாம்—அவளை மணம்புரியவேண்டுமாம்.

சகு: என்னது! என்னது! பலராமன் தங்கையா? அதாவது—கிருஷ்ணன் தங்கையல்லவா?

துர்: ஆம்: அதை உத்தேசிக்கத்தான் ஒன்றுந்தோன்றாது தங்களை வரவழைத்தேன்.

கர் : மாமா ! நான்சொன்னேன்—பலராமனைக் கேட்டுப்பார்க்கிறது : அவன், ஸம்மதித்தாலாயிற்று ; இல்லாவிடில், கிருஷ்ணன் ருக் மணியை அபஹரித்ததுபோல், ஸுபத்ரையை எடுத்து வந்து விடுவோம், என்று சொல்லிக்கொண்டிருந்தேன் ; நீங்களும் வந்தீர்கள்.

சகு : (ஸ்வகதம்) அடே! கிருஷ்ணன் கொண்டுவந்ததுபோல் இவனும் கொண்டுவந்து விடுவானுமே ! பேஷ் ! இவர்களங் கேபோனுல், முதலில், இவர்கள் தப்பிப்பதே தம்பிரான் புண்ய மாய்விடும்.—ஹும் : இந்தப் பசங்களுக்கு நம் யுக்தி புத்தி யால் ராஜ்யம் நிற்பதால், கொழுப்பேறித் தன் யோக்யதையை அறியாது, அக்கோபாலனையும் எதிர்ப்பதாக மீசை முறுக்கு கிறுர்கள் ! உம்—கண்ணன்முன் இவர்கள்யார் ? விளக்குப்பூச் சியைப்போல்.

கர் : என்ன யோஜிக்கிறீர்கள் மாமா ? ஸரிதானு : சொல்லுங்கள் ?

சகு : கர்ணு ! பதறுதே—

கர் : என்ன மாமா ? முடியாதென்றெண்ணுகிறீர்களா ?

சகு : அதை யாரடா சொன்னுர்கள். அதைப்பற்றி ஜோஸ்யம் வேறு கேட்கவேண்டுமா ? இதிலே—பாரு—கிருஷ்ணன் ருக் மணியை எடுத்து வந்தானென்றுல், அது வேறு விஷயம்.—

துர் : என்ன ?

சகு : அது என்னவென்றுல்—அதில் ருக்மணி ஸம்மதமிருந்தது ; அதுபோல் ஸுபத்ரை ஸம்மதம் தெரிந்தபிறகல்லவோ, மேலே யோஜிக்கவேண்டும்.

துர் : ஆம், கர்ணு ! அதற்குத்தான் மாமா வேண்டுமென்கிறது.

சகு : எதற்கு ?

துர் : பாருங்களேன் : இந்த யோஜனை இதுவரையிலும் எங்களுக் குத் தோன்றவில்லை.

சகு : (ஸ்வகதம்) உங்களுக்கெதுதான் தோணும். (ப்ரகாசமாய்) நல்ல வேளையாய்ப் போயிற்று. ஸுபத்ரையை அடையும்வழியை யோஜித்துக்கொண்டிருக்கும்பொழுது, "மாமா வேண்டும்" என்று சொன்னவுடனே, எனக்கு யோஜனையாய்ப் போய்விட்டது, நமக்கு அந்தத் தொழில் வேறே கொடுத்து விடுகிருயோ என்று.

துர் : என்ன மாமா பரிஹாஸம் செய்கிறீர்கள்? மாமா, தாம் தான் ஓர் மார்க்கம் சொல்லவேண்டும்.

சகு : ஒன்று செய்யேன்.

துர் : என்ன மாமா ?

சகு : பலராமன்தான் உனக்கு ஸ்நேஹிதனுச்சே. அவனுக்கு ஒரு லிகிதம் எழுதுகிறதுதானே ?

துர் : என்ன மாமா, எனக்காக நானே எப்படி எழுதுவது ?

சகு : உம்—அதுவும் ஸரிதான். கர்ணன் எழுதட்டுமே.

துர் : அதுதான் ஸரி மாமா. நண்பா கேட்டனையா? ஏன் சீக்கிரம் ஒரு லிகிதம் எழுதிக்கொண்டுவா ?

கர் : ஸரி : இதோ எழுதி வருகிறேன்.

[கர்ணன் போகிருன்.]

சகு : துர்யோதனு! லிகிதம் அனுப்புவது பெரிதல்ல ; அதைக் கொண்டுபோகிறவன் நல்ல புத்திசாலியா யிருக்கவேண்டும். ஏனென்றுல், அவன் கொடுக்கும் ஸமயம், பலபத்ருடன் கிருஷ்ணன் இல்லாத ஸமயமா யிருக்கவேண்டும். அவர் ஸந்தோஷமாயிருக்கும் ஸமயமா யிருக்கவேண்டும். அத்தோடு கூட, நான் சொன்னேன் பார், "ஸுபத்ரைக்கு ஸம்மதமிருக்கவேண்டுமென்று": போகிறவன், அங்கேயே இரண்டொரு தினங்கள் தங்கியாவது, ஸுபத்ரையின் அபிப்ராயத்தை அறிந்து வரக்கூடிய ஸாமர்த்தியமுள்ளவனைப் பார்த்து அனுப்பவேண்டும்.

துர் : மாமா ! நம் துர்விதக்தனை அனுப்பலாமா ?

சகு : உம்—நல்ல யோஜனை : அவன் புத்திசாலிதான் : அவன் தகுந்தவன்தான், அவனையே அனுப்பு. அப்பா ! (எழுந்து) நான் வரவா ?

துர் : (எழுந்து) அப்படியே மாமா.

(சகுனி போகிறான்.)

ஸீன் 2.

இடம் :—துர்யோதனன் மாளிகையிலோரிடம்.

[துர்விதக்தன் பின்றொடர துர்யோதனன் கையில் லிகிதத்துடன் வருகிறான்.]

துர் : துர்விதக்தா ! நீ இன்றே புறப்பட்டு த்வாரகை சென்று (லிகிதத்தைக் கொடுத்து) இந்த லிகிதத்தைப் பலபத்ரரிடம் கொடுத்து, இதற்குப் பதில் வாங்கிவரவேண்டும் ; ஆனால் அதில் சில விஷயங்களிருக்கின்றன.

துர்வி : (லிகிதத்தைக் கையில் வாங்கிக்கொண்டு) என்ன மஹாராஜா ?

துர் : கிருஷ்ணனில்லாத ஸமயமாயும், அவர் ஸந்தோஷமாயிருக்கும் ஸமயமாயும் பார்த்து இதைக் கொடுக்கவேண்டும்.

துர்வி : அப்படியே மஹாராஜா ! ஆனால் ஸமாசாரம் இன்னதென்று தெரிந்திருந்தால், ஸமயத்திற்குத் தக்கபடி யுக்தியாய் நடந்து கொள்ளலாம். ஒன்றும் தெரியாமல் சென்றால், அவ்வளவு—(கைகளைப் பிசைகிறான்.)

துர் : ஆம் : வாஸ்தவம். பலபத்ரர் தங்கை, ஸுபத்ரையை எனக்குக் கொடுக்கும்படி, கர்ணன் அவருக்கு எழுதியிருக்கும் லிகிதமிது.

துர்வி : ஸரி, ஸரி ; அவ்வளவு தெரிந்தால் போதுமானது மஹாராஜா.

துர் : துர்விதக்தா ! அத்துடன், ஒரு முக்யமான விஷயம் ஒன்று அறிந்துகொண்டு வரவேண்டும் நீ. அதை உத்தேசித்தே தான் உன்னை அனுப்புகிறது.

துர்வி : என்ன மஹாராஜா ? காத்துக்கிண்டிருக்கிறேன்.

துர் : ஒருவருமறியாதபடி இதுவிஷயத்தில் ஸுபத்ரையின் அபிப்ராயம் எப்படியிருக்கிறதென்று அறிந்து வரவேண்டும் நீ.

துர்வி : (கைகளைப் பிசைந்துகொண்டு) மஹாராஜா ! மஹாராஜா ! முதலிலே, கிருஷ்ணன், என்னை உங்கள் ஆஸாமி என்று தெரிந்துகொண்டாலே, நானிங்கே திரும்பிவரமுடியாது ; அங்கேயே, ஓசைப்படாமே என்னை வெட்டிப் புதைத்துவிடுவான் : போதாததற்கு, அந்தப்புரம் கிந்தப்புரம் போனுல், வேறே வினைவேண்டாம்.

துர் : அவ்வாறு ஒன்றும் நேராது. துர்விதக்தா ! நீ மஹா தந்திரசாலியல்லவா ? உனக்கிது ஒரு பொருட்டா ? எனக்குத் தெரியாதோ ? துர்விதக்தா ! நீ இக்கார்யத்தை ஸாதித்துக் கொண்டு வருவாயாகில், நீ கேட்கும் தனத்தை அளிப்பேன். இது ஸத்யம்.

துர்வி : அதிலென்ன ஆக்ஷேபனை மஹாராஜா ! ஆனுல், ஒருவேளை எக்கச்சக்கமாய் முடிந்துவிட்டால், நான் நிரம்ப பிள்ளை குட்டிக்காரன்—

துர் : அஞ்சாதே ! அப்படியே தெய்வாதீனம் ஏற்பட்டுவிட்டால், உன் குடும்பத்திற்கு ஏழு தலைமுறைக்குக் காணும்படியான தனமும் நிலமும் கொடுத்து ரக்ஷிப்பேன்.

துர்வி : அவ்வளவுதான் மஹாராஜா வேண்டியது. என்னமோ ஆறிலேயும் சாவு நூறிலேயும் சாவு என்பதுபோல், என்னைப்பற்றி கவலையில்லை.—மஹாராஜா ! உத்திரவு கொடுங்கள்.

துர் : ஸரி : புறப்படு :

துர்வி : (சற்று தூரம்போய் திரும்பிவந்து கைகளைப் பிசைந்துகொண்டு) மஹாராஜா ! ஒன்றுமில்லை—இப்பொழுது கொஞ்சம் தனம் கொடுக்க உத்திரவாகவேண்டும்.

துர் : உனக்கெவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தரச் சொல்லுகிறேன் : வாங்கிக்கொள் :

துர்வி : ஸரி. உத்திரவு—

[போகிருன்.]

[மற்ருெருபுறமாக துர்யோதனனும் போகிருன்.]

ஸீன் 3.

இடம் :—த்வாரகையில் நந்தவனம்.

[ஸுபத்ரை வெகு உல்லாஸமாக வருகிருள்.]

ஸு : (சுற்றுமுற்றும் பார்த்து தனக்குள்) இதென்ன இது ! என் தோழிகளெல்லாம் முன்பே வருவதாகச் சொன்னவர்கள் ஏன் இன்னம் வரவில்லை ? ஒருவேளை, நம்மை மாத்திரம் விரைவில் வரச் சொன்னவள் ஏன் வராதிருக்கிருள், என்று கோபங்கொண்டு, எங்கேயாவது ஒளிந்துகொண்டிருப்பார்களோ ? இருந்தாலும்இருக்கும்—உம்—வேறுஎங்கே ஒளிந்துகொண்டிருக்கப் போகிருர்கள்—இச்செடிகள் மறைவில் தவிர ?—பார்க்கிறேன்—(நந்தவனத்தைச் சுற்றிவர **வனஜமும், ஸரஸாவும்** வருகிருர்கள்) ஏனடி ? இப்படித்தான் வருகிறதோ ? எப்பொழுதே வரச்சொன்னேன் உங்களை ?

[**துர்விதக்தன்** இவர்களறியாதபடி ஓர் பக்கத்தில் வந்து நின்று கவனிக்கிருன்.]

வன : ஸுபத்ரா ! நானப்பொழுதே என் அகத்தைவிட்டுப் புறப்பட்டுவிட்டேன் ; இவளாலேதான் இவ்வளவு நாழிகை.

ஸு : அவள் எப்பொழுதும் அந்தஸ்துக்காரியாச்சே, எனக்குத் தெரியுமே. அவளுக்கு அகத்தைவிட்டு வாசலிலே வருவதற்குக்கூட, பெண்பார்க்க வருவதுபோல், சிங்காரித்துக் கொள்ளவேண்டும் ; நீயோ, அவளை விட்டுத்தான் அரை நாழிகூடப் பிரிந்திருக்கமாட்டாய்.

ஸர : என்னமோ அம்மா, நானுவது வெளியிலே வரவேண்டுமானல் சிங்காரித்துக் கொள்ளுகிறேன் ; சொல்லுகிறவர்களுக்கு அரண்மனைக்குள்ளேயே ஒரு அறையிலிருந்து அடுத்த

அறை போகவேண்டியிருந்தாலும் தெருக்குள்ள சிங்காரம் ஆகவேண்டியிருக்கு.

ஸு : ஆமண்டீ! ஆனால், உன்னைப்போல் எனக்கென்ன நாழிகை ஆகிறதோ ?

வன : அதற்கென்ன, ஆயிரம் தாஸிகள் கைகட்டிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள், எள்ளென்பதற்குமுன் எண்ணெயாய் நிற்க.—

ஸர : எங்களுக்கோ எங்களம்மா வகை ஒழிந்த ஸமயந்தானே பார்க்கவேண்டியிருக்கு.—

வன : அதிலும், நீ எப்படியிருந்தாலும் பாதகமில்லையம்மா ; ஸ்வயத்திலேயே அழகு நீ.

ஸு : மெள்ளடீ, மெள்ள :—உம்—நான்தான் அழகென்று உங்களிடம் வந்து சொல்லிக்கொள்ள வந்தேனா என்ன ?

வன : சொல்லிக்கொண்டால்தானா என்ன.

ஸு : அதுபோகட்டும்—ஏனடி, ஸரஸாவுக்கு கலியாணமாமே ? எங்கேயடி பார்த்திருக்கு இவளுக்கு ?

வன : எங்கேயோ அம்மா ! இன்னம் ஒன்றும் நிச்சயமானதாகத் தெரியவில்லை. உனக்கென்னம்மா, புருஷன் கைக்குள்ளேயே இருக்கிறான்.

ஸு : ஸரிதானடி : ரொம்பத்தான் :—நீ ரொம்ப கண்டையோ இல்லையோ !

வன : அட ! எனக்குத் தெரியாதோ, அத்தை பிள்ளை அர்ஜுனனென்று !

ஸர : அடி அசடே ! ஸுபத்ரைக்குத் தெரியாதோ நமக்குத் தெரியுமென்று : எப்படியாவது அவர் பெயரைக் கேட்டு ஆநந்தப்படுவோமே என்று உன் வாயைப் பறிக்கிறாள். இது உனக்குத் தெரியவில்லையே !

ஸு : ஸரிதானடி ! இதெல்லாம் என்னடி பரிஹாஸம் ?

துர்வி : (ஸ்வகதம்) ஸரிதான். அர்ஜுனன்தான் தகுந்தவர் இவளுக்கு !

வன : ஸுபத்ரா ! எல்லாம் ஸரிதான் : பாண்டவர்களிப்பொழுது நல்ல ஸ்திதியி லில்லேயோ லிருக்கிறதே ? அப்படியிருக்க உங்கள் மூத்தண்ணு உன்னை அவருக்குக் கொடுக்க ஸம்மதிப்பாரோ ?

துர்வி : (ஸ்வகதம்) நல்லவேளை : நம்மதிர்ஷ்டந்தான் :—இதற்கென்ன பதில் வருகிறது பார்ப்போம்.

ஸு : அடி ! குப்பையிலிருந்தாலும் குன்றுமணி நிறம் மாறுமாடி ! அதுபோல் அவர்களுக்கென்ன நிலைமை வந்தாலென்ன ?

வன : இல்லை.—ஒருவேளை துர்யோதன—

ஸு : சீ ! அம்மூதேவியைப்பற்றிப் பேசினுல் தெரியுமா இனி ?

துர்வி : (ஸ்வகதம்) நல்ல வெஹுமானம் !

ஸர : அடிதென்ன நெருப்பென்றால் வாய் வெந்துபோமா என்ன ?

வன : அதானே கேட்கிறேன் ! அவரென்ன அரசனில்லையா ? அதுவும் இப்பொழுது இருக்கும் அரசர்களுக்குள் அவர்தான் உயர்ந்தவரென்று கேள்விப்படுகிறேன்.

துர்வி : பேஷ் ! இதற்கென்ன பதில் வருகிறதென்று பார்ப்போம்.

ஸு : அதனுல் சொல்லுகிருயோ, ஸரிதான். அடி ! லக்ஷ்மியின் ஸ்வபாவம் தெரியாதோ ? இன்றைக்கிருந்தவிடம் நாளைக்கிராள். மஹா சபல சித்தமுடையவள். ஆதலால் அவளிருப்பிடம் மேலானதென்று ஒருநாளும் மதிக்கலாகாது. ஆகவே, எவன் புத்திமானே ? எவன் சூரனே ? எவன் உதாரகுணமுடையவனே ?—அவன்தான் மேலானவன்—தெரியுமா ?—ஹும்—அதிர்ஷ்டவசத்தால் ராஜ்யங் கிடைத்தால் அதை வைத்தாள யோக்யதை வேண்டாமா ? குரங்கின் கையிலகப்பட்ட பூமாலேபோல் துர்யோதனனுக்கு ராஜ்யம் கிடைத்திருக்கிறது.

துர்வி : ஸ—ரி—புரிந்துவிட்டது—மட்டைக்கு இரண்டு கீற்றென்று.

வன : ஸுபத்ரா ! ஏனிவ்வளவு கோபம் வருகிற துனக்கு ?

ஸு : பின் என்ன ! யாராவது குயிலின் மாதுர்யமான சப்தத்தைக் கேட்காது காக்கையின் கத்தலைக் காதுகொடுத்துக் கேட்க விரும்புவார்களா ? அல்லது, அன்னத்தின் நடையைப் பார்த்தானந்திக்காது, கொக்கின் நடையைப் பார்க்க விரும்புவார்களா ?— அல்லது, ஜாதி மலரின் வாஸனையை க்ரஹிக்காது, எருக்கம்பூவின் நாற்றத்தை க்ரஹிக்க விரும்புவார்களா ?—

துர்வி : பேஷ் : பேஷ் : நல்ல உபமானம்—உம்—வாஸ்தவந்தானே. அர்ஜுனராஜனெங்கே நம்மவரெங்கே !

ஸு : தோழிகாள் ! என் மனம் இப்பொழுது விளையாட்டில் செல்லாதுபோலிருக்கிறது. வாருங்கள் போவோம் அந்தப்புரத்திற்கு.

(சொல்லிக்கொண்டே போகிருள்.)

(வனஜமும் ஸரஸாவும் பின் தொடருகிருர்கள். துர்விதக்தன் அவர்களறியாதபடி மற்றொருபுறமாகப் போகிருன்.)

ஸீன் 4.

இடம் :—ராஜவீதி.

[துர்விதக்தன் வருகிருன்.]

துர்வி : (ஸ்வகதம்) உம்—இனி இந்த லிகிதத்தை பலபத்ரரிடம் கொடுப்பதில் என்ன ப்ரயோஜனம் ?—ஒன்றுமில்லை—சிவனே என்று திரும்பிப் போய்விடலாம் என்று தோன்றுகிறதெனக்கு.—ஆனால், அதனால் வந்துவிட்டது மோசமென்பார்கள் ? — நம்ம ராஜாவுக்குத்தான் ஸ்வயபுத்தி என்கிறது கிடையாதா !—உம்—ஏதோ, அதிருஷ்டம் மாத்திரமிருக்கு :— ப்சு—நமக்கேன்பாடு—ஒருவேளை பலபத்ரருக்கு ஸம்மதமிருந்தால், மெள்ள அவள் மனதைத் திருப்பிவிட்டாலும்விட

லாம் :—அடப்பா ! அவள் மனதா திரும்பும் ?—உம்—என்ன மோ ? மஹாராஜாவுக்கு மற்றவிதத்தில் அதிருஷ்டமிருக் கிறப்போல், இதிலேயுமிருக்கோ என்னவோ, யார் கண் டார்கள். நமக்கேன்பாடு, நமக்கிட்ட வேலையை நாம் செய் துவிடுவோம்.

[போகிறுன்.]

ஸீன் 5.

இடம் :—பலராமன் அரண்மனை.

[பலராமன் ஏகாந்தமாய் வீற்றிருக்க ஒரு ஸேவகன் வந்து பணிகிறுன்.]

ஸே : மஹாராஜ் ! ஹஸ்திநுபுரத்திலிருந்து ஒரு தூதன் வந்து ஆசாரவாசலில் காத்திருக்கிறுன்.

பல : அப்படியா, வரச்சொல்.

[ஸேவகன் போகிறுன்.]

(ஸ்வகதம்)—உம்—ஹஸ்திநுபுரம்—துர்யோதனனிடமிருந்து நமக்கென்ன ஸமாசாரமிருக்கும்.

[துர்விதக்தன் வருகிறுன்.]

துர்வி : (பணிந்து) மஹாராஜ் ! துர்யோதன மஹாராஜவின் தூதன் யான். கர்ணமஹாராஜா ஸமுகத்திற்கோர் லிகிதம் கொடு த்துவர அனுப்பியிருக்கிறுர்.

(லிகிதத்தைக் கொடுக்கிறுன்)

பல : (லிகிதத்தை வாங்கி வாசித்துக்கொண்டே) அப்பா ! த்ருத ராஷ்டரர், விதுரர், துர்யோதனன், அவனது ஸகோதரர்கள், கர்ணன் முதலியவர்கள் க்ஷேமமா ?

துர்வி : எல்லோரும் க்ஷேமம் மஹாராஜா !

பல : த்ரோணசாரி ப்ரப்ருதிகள் ஸெளக்யமாயிருக்கிறுர்களா ?

துர்வி : ஸெளக்கியமாயிருக்கிறுர்கள், மஹாராஜா.

பல : (ஸ்வகதம்) ஓகோ! மறந்தேன். ஸுபத்ரைக்கு அதிருஷ்டந்தான்.—அப்பா! நீ இன்று இவ்விடம் தங்கி நாளை போகலாம். போகும்பொழுது பதில் தருகிறேன்.—

துர்வி : (ஸ்வகதம்) ஏது நல்ல வேளையாய் லிகிதத்தைப் பார்த்ததும் முகமலர்ச்சி உண்டாயிற்றே என்று பார்த்தேன். நாளையென்றால் மோசந்தான்.—இல்லை மஹாராஜா, நானின்றே புறப்பட்டால்தான் குறித்ததினம் போய்ச்சேரலாம்.

பல : ஸரி : அப்படியாயின் உன்னிஷ்டம். ச்ரமப்பட்டு வந்தவனை உடனே போகச் சொல்வது தர்மமல்லவென்று சொன்னேன்.

துர்வி : மஹாராஜா சொன்னதிலேயே என் ச்ரமம் தீர்ந்துவிட்டது. நானின்றே புறப்பட்டால்தான்—(கைகளை பிசைகிறான்.)

பல : ஸரி : அப்படியாயின் பதில் தருகிறேன், இரு.

[போகிறான்.]

துர்வி : (ஸ்வகதம்) உம்—சாமி வரங்கொடுத்து என்ன பண்ணுகிறது? பூசாரிக்கல்லவோ மனசு வரவேண்டும்—உம்—என்னமோ எனக்குத் தோன்றவில்லை. ஏது, எப்படிப் போனாலென்ன ; நாம் வந்த கார்யம் ஜெயமாய்விட்டது. இந்த பதிலைப் பார்த்ததும் நம் இனும் இரண்டுமடங்காய்விடும். பார்த்துக்கொள்வோம்.

[பலராமன் லிகிதத்துடன் வருகிறான்.]

பல : இந்தா இதைக் கொடுத்து, நானெல்லோரையும் க்ஷேமம் விசாரித்ததாகச் சொல். (லிகிதத்தைக் கொடுக்கிறான்.)

துர்வி : (வாங்கிக்கொண்டு) அப்படியே மஹாராஜா.—

(சற்று தயங்குகிறான்.)

பல : நீயும் விவாஹத்திற்கு வருவாயல்லவா ?

துர்வி : வருவேன் மஹாராஜா! (ஸ்வகதம்) நல்லவேளை : எப்படித் தெரிந்து கொள்வதென்று தயங்கினதற்கு, ஸமாசாரம்

தெரிஞ்சு போச்சு.—மஹாராஜா! உத்திரவு கொடுக்கவேண்டும்.

பல : ஸரி: போய்வா அப்பா.

[துர்விதக்தன் போகிறான்.]

அடே! ஸேவகா!

[ஸேவகன்வந்து பணிந்துநிற்கிறான்.]

கிருஷ்ணனை நான் பார்க்கவேண்டுமென்று இருக்கிறதாகச் சொல், போ.

[ஸேவகன் போகிறான்.]

ஸீன் 6.

இடம் :—கிருஷ்ணன் அரண்மனை.

[கிருஷ்ணன் வீற்றிருக்க ருக்மணி பக்கத்தில் நிற்கிறாள்.]

கிரு : ருக்மணி! ஸுபத்ரைக்கு விவாஹம் நிச்சயமாயிருக்கே. தெரியுமா உனக்கு?

ருக் : அதென்னது! அர்ஜுனன் தீர்த்த யாத்திரை முடிந்து திரும்பி வந்துவிட்டானோ?

கிரு : அர்ஜுனன் எதற்கு?

ருக் : பின்? கல்யாணம் என்றீர்களே?

கிரு : ஸுபத்ரைக்கென்றால், அர்ஜுனன் எதற்கு?

ருக் : என்ன நாதா! எனக்கொன்றும் புரியவில்லையே!

கிரு : பயித்தியமே! ஸுபத்ரையை துர்யோதனனுக்குக் கொடுக்க வேண்டுமென்று முத்தண்ணாவுக்கு கர்ணன் லிகிதம் அனுப்பினனும்; அதற்கு முத்தண்ணா ஸம்மதித்து பதிலும் அனுப்பிவிட்டார்; நிச்சய தாம்பூலத்திற்கு புறப்படவேண்டியதுதான் பாக்கி.—

ருக் : நன்றாயிருக்கே இது ! முத்தண்ணுதான் "ஸரி" என்று சொன்னல், உங்களுக்கிது தெரியவேண்டாமா என்ன ?

கிரு : ஏன் ? தூர்யோதனனுக்கென்ன—ஸாமான்யமானவனு ?—இப்பொழுதிருக்கும் அரசர்களுக்குள் மேலான ஸ்திதியிலிருக்கிறான்.—

ருக் : இதென்ன பரிஹாஸம் நாதா ! வாஸ்தவமென்ன ?

கிரு : ஆனல் நான் பொய்யா சொல்லுகிறேன் ?

ருக் : ஐயோ போகட்டும் "குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா" என்பார் : அதுபோல, அந்த மூதேவியைப்பற்றி தாங்கள் ஸ்தோத்திரஞ்செய்தால், அதை யாராவது நிஜமென்று நம்புவார்களா ? அதிலும், நான் நம்புவேனு ?—நாதா ! தாங்கள் அதைத் தடுத்துவிட்டீர்களல்லவா ?

கிரு : நானெப்படித் தடுப்பது ? பதில் அனுப்பியபிறகுதானே என்னிடம் சொன்னர்.

ருக் : எழுதினுலென்ன ? கிளியை வளர்த்துப் பூனையின் கையில் கொடுக்க யாராவது ஸம்மதிப்பார்களா ? மேலும், இது ஸுபத்ரை காதில் பட்டால் அவள் உடனே ப்ராணனை விட்டுவிடுகிறேன் என்பாள்.

கிரு : நான் சொல்லாமலிருக்கவில்லை ; சொன்னேன் :—"ஸுபத்ரை ஸம்மதம் கேட்கவேண்டாமா" என்று ; அதற்கு அவர் "அவளென்ன ஆக்ஷேபிக்கப் போகிருள் : எல்லாவற்றிற்கும், நான் ரேவதியை விட்டு சொல்லச்சொல்லுகிறேன்" என்று சொல்லிவிட்டார். அதற்குமேல் நான் என்ன சொல்லுகிறது ?

ருக் : நாதா ! இது நிரம்ப அக்ரமம் ! நீங்கள் சொல்லாது வேறு யார் சொல்வது ?

கிரு : ஸரி ! எல்லாவற்றிற்கும் முதலில் ஸுபத்ரையின் அபிப்ராயத்தைத் தெரிந்துகொள் ; பிறகு அதைப்பற்றி யோஜிப்போம்.

ருக் : அவள் அபிப்ராயம் இனியா தெரிந்துகொள்ள வேண்டும் ! நமக்கெல்லாம் தெரியாதா என்ன ?

கிரு : அது ஸரி : இருந்தபோதிலும் நீயும் மதனியுடன் சேர்ந்து அவனைப்பற்றி ச்லாஹித்து ஸுபத்ரையிடம் சொல்லு. அதற்கும் அவள் பிடிவாதமாயிருந்தால் பிறகு ஆகவேண்டியதைப் பற்றி பார்ப்போம்.

ருக் : என்ன நாதா ! அவனையா என் வாயால் ச்லாஹிப்பேன் ? நான் மாட்டேன்.

கிரு : இது ஏதடாது !. அவள் ஒருவேளை ஸம்மதப்பட்டாலும்கூட நீ தடுத்துவிடுவாய்போலிருக்கிறதே !

ருக் : ஆமாம் : செய்தாலும் செய்வேன். அவள் குழந்தைதானே ; அவளுடைய ஸுகதுக்கத்தைப்பற்றி நாம் கவனிக்காது வேறு யார் கவனிக்கிறது ?

கிரு : அட பயித்தியமே ! இருந்தாலும் ஸுபத்ரையின் த்ரடமும் நமக்குத் தெரியவேண்டாமா ?—போ சீக்கிரம், மதனியின் அந்தப்புரத்திற்கு.

[இருவரும் போகிறார்கள்.]

ஸீன் 7.

இடம் :—ரேவதியின் அந்தப்புரம்.

(ரேவதியும் ருக்மணியும் ஒரு ஊஞ்சலில் வீற்றிருக்க, ஸுபத்ரை வேகமாய் வருகிறாள்.)

ஸு : (அவ்விருவர்கள் மத்தியில் உட்கார்ந்து) மதனி ! என்ன விசேஷம் ? என்னை அழைத்தீர்களாமே ?

ரே : என்ன ஸுபத்ரா ! இத்தனை நாழிகை என்ன செய்துகொண்டிருந்தாய் ? நாங்கள் எப்பொழுதே கூப்பிட்டனுப்பினோம் ?

ஸு : மதனி ! நானும் ஸரஸாவும் பல்லாங்குழி ஆடிக்கொண்டிருந்தோம், அப்பொழுது—உடனே எழுந்தேன் மதனி—அப்பொழுதே வந்திருப்பேன்—அப்பொழுது அவள்சொன்னாள் :— “ நீ தான் சப்பை ” என்று—அந்த ஸமயம் அவளிடத்தில் கொஞ்சம் காய் ஜாஸ்தியாயிருந்த திமிரினால். எனக்குப்பாரு, உடனே வந்துவிட்டது கோபம்—“ அப்படியா சொல்லுகிறாய்,

உன்னை சப்பை யடித்துவிட்டே எழுந்திருக்கிறேன் பாரு" என்று உட்கார்ந்து விட்டேன்.—அதனால் தான் மதனி கொஞ்சம் நாழிகை ஆய்விட்டது.—ரொம்ப நாழிகையாய்க் காத்துக் கொண்டிருக்கிறீர்களோ நீங்கள் ?

ருக் : அது போகட்டும் : கடைசியில் யார் சப்பையானது ?

ஸு : யாரா ? அவளை, சப்பை, சோவானை பண்ணிவிட்டுத்தானே எழுந்திருந்தேன் ; இல்லாமல்போனால் இன்று முழுதாயினும் எழுந்திருப்பேனா ?

ருக் : ஏது, எதிலேயும் பிடிவாதந்தானா ?

ஸு : பின்னென்ன.—அவள் மாத்திரம் ஸமயம் பார்த்து அப்படிச் சொல்லலாமோ ? இவளுக்கு முதலாட்டத்திலேயே இன்ன குழி யெடுக்கிறதென்றுகூட தெரியாது ; இவள் வந்து என்னைச் சொல்லவாவது ?—நீங்கள் அழைத்தீர்களே என்று இத்துடன் விட்டேனிவளை—இல்லாது போனால் இவள் சொன்னதற்கு, இன்றைக்கு பத்து சப்பைக்குக் குறையாமல் வாங்கி வைத்துத்தானே போகச்சொல்லி யிருப்பேன்.

ருக் : ஏதேது, வருகிறவன்பாடு ஆபத்துத்தான்.

ஸு : (லஜ்ஜையால் தலை குனிந்து) போ மதனி ! உங்களுக்கெப்பொழுதும் என்னைப் பரிஹாஸம் பண்ணிக் கொண்டிருக்க வேண்டுமோ.

ரே : ஸுபத்ரா ! அது போகட்டும் : உன்னை வரவழைத்தது எதற்குத் தெரியுமா ?

ஸு : எதற்கு ?

ரே : உன் முத்தண்ணா உனக்கு விவாஹம் நிச்சயித்திருக்கிறார் : உன் அபிப்ராயத்தைத் தெரிந்து வரவேண்டுமென்று என்னிடம் சொல்லியிருக்கிறார் : அதற்காகத்தான் உன்னை இங்கழைப்பித்தது. (ஸுபத்ரை லஜ்ஜையால் மௌனமாயிருக்கிறாள்) என்ன ? வெட்கப்படாதே, சொல் ?

ஸு : போ மதனி எனக்கொன்றும் தெரியாது. (சொல்லிக் கொண்டே எழுந்து ஒருபுறமாய் நிற்கிருள்.)

ரே : அப்படியானல் நாங்கள் எங்கு நிச்சயம் செய்தாலும் உனக்கு ஸம்மதம்தானு ?

ருக் : ஸம்மதம்தான்போலிருக்கிறது : அதுதான் அவளுக்கொன்றும் தெரியாதென்று சொல்லிவிட்டாளே ! ஏன் ஸுபத்ரா, அப் படித்தானே ?

ஸு : அவாளவாள் மனஸை தொட்டுப்பார்த்துக்கொண்டால் தெரி கிறது—நான் சொல்லவேணுமா என்ன ?

ரே : (எழுந்து அவளிடம் வந்து) என்ன ஸுபத்ரா ! எனக்கொன் றும் புரியவில்லையே ?

ஸு : இல்லை ; சின்ன மதனி சொன்னதற்குச் சொன்னேன்.

ருக் : (எழுந்து வந்து) பின் என்ன ? அபிப்ராயம் என்ன என்று கேட்டால் சொன்னலென்ன ?—அப்படியென்றல் உனக்கிஷ்ட மில்லாதவனுக்குக் கொடுப்பதாகச் சொன்னல் பேசாமலிருப் பாயா நீ ?

ஸு : அதற்குத்தான் நீங்களே வழிகாட்டி யிருக்கிறீர்களே !

ருக் : அதனல்தான் கேட்கிறது, என்னைப்போல் திண்டாடாமலி ருக்க ?

ஸு : இப்போ என்ன பண்ணவேண்டு மென்கிறீர்கள் என்னை ?

ரே : உன் முத்தண்ணு உன்னை துர்யோதனனுக்குக் (ஸுபத்ரையின் முகம் மாறுகிறது.) கொடுக்க நிச்சயம் செய்திருக்கிறராம். (ஸுபத்ரை தலை குனிகிறள்.) நான்கூடச் சொன்னேன் :— “அத்தை பிள்ளைக்குக் கொடுப்பதாக இருந்ததே” என்று. அதற்கவர் “நம்ப குழந்தையை நல்ல விடத்தில் கொடுக்க வேண்டாமா ? இப்பொழுது இருக்கிறதில் அவன்தானே நல்ல ஸ்திதியில் இருக்கிறன்” என்றர் அம்மா. உனக்கிதில் ஸம்மதம்தானே.

ருக் : அப்பொழுது என்னமோ அத்தை பிள்ளை, கித்தை பிள்ளை என்றது, அவாளும் நல்ல ஸ்திதியிலிருந்ததினுலேதான். இப் பொழுதோ அவர்கள் நிரம்பவும் கஷ்டப்படுகிருர்கள் : அதி லும், தீர்த்த யாத்திரைக்குப்போன அர்ஜுனன் ஸமாசாரமே தெரியவில்லை : அவன் எப்போ வருகிருனே என்னமோ, யார் கண்டார்கள் ?—அதனுலே, என்னமோ, இப்போ இருக்கிறதற் குள்ளே துர்யோதனன்தான்—(ஸுபத்ரை கோபத்தால் குறுக்கா கப் பார்த்து, துக்கம்மேலிட, கண்களில் நீர் ததும்புவதைக் கவனித்து) அப்பா! பார்க்கிறதைப் பார் என்னைச் சுட்டுவிடுவாள்போல! (அவள் ஸமீபம் போய் அவளை அணைத்து) ஸுபத்ரா !—எதற்கடி அழுகிருய் ?

ஸு : (அவளை விட்டு திமிறிக்கொண்டு) மதனி! நான் வருகிறேன். [போகிருள்.]

ரே : பதில் ஒன்றும் சொல்லாமல் போனுல் ?

ஸு : நானென்ன சொல்லுகிறது இனி.

(சொல்லிக்கொண்டே வேகமாய்ப் போகிருள்.)

ரே : இதென்னடியம்மா இந்தப் பெண் !

ருக் : பார்த்தீர்களா ! நானப்பொ பூதே சொல்லவில்லையா ?

ரே : இதென்ன கஷ்டமாகவல்லவா இருக்கு ! அவரோ அவனுக்குத் தான் கொடுக்கவேண்டுமென்று ஒரே பிடியா யிருக்கிருர் : இவளோ அவன் பெயரை எடுக்கச்சேயே பொழியப்பொழிய அழ ஆரம்பிக்கிருளே ! அதென்னமோ அம்மா ; நீதான் மச்சினரிடம் சொல்லி ஏற்பாடு செய்யவேண்டும்.

ஸீன் 8.

இடம் :—ஸுபத்ரையின் கன்யாமாடம்.

[ஸுபத்ரை மிகுந்த துக்கத்தால், விம்மிவிம்மி அழுதவண்ணம் மெள்ள வந்து ஓர் சயனத்தில் சாய்ந்து மூர்ச்சையாகிருள்.]

ஸு : (மூர்ச்சை தெளிந்து, மெள்ள உட்கார்ந்து, தனக்குள்) ஜக தீசா ! கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தவரும்,

காளிங்கமடுவில் குதித்து காளிங்க நர்த்தனஞ் செய்தவரும், கம்ஸாதி அஸுரர்களை அரை நொடியில் ஸம்ஹரித்தவரும், ராஸக்ரீடை முதலியவைகளால் உலகத்தையே மோஹிக்கச் செய்தவருமான தாமரைக் கண்ணன் தங்கைக்கு இக்கதி வாய்க்க வேண்டுமா ?—ஐயோ ! முத்தண்ணுதான் தெரியாத்தனத்தால், ஏதோ சொன்னுரென்ருல், பால்யம் முதல் "ஸுபத்ரா ! உன் அழகுக்கு ஏற்றவன் அர்ஜுனன்தான் ; அவனுக்கேற்றவள் நீயே" என்றும், "அவனுக்கென்றே உன்னை சதுர்முகன் ச்ருஷ்டித்திருக்கிருன்." என்றும், பலவாறு ஸதா வாய்க்குவாய் சொல்லிக்கொண்டிருந்த சின்னண்ணுவும் இதற்கெப்படி ஸம்மதித்தாரோ, தெரியவில்லை.—அண்ணு ! உமது கபட நாடகத்தால் கோபிகைகளை ஏமாற்றுவது போல், என்னையும் ஏமாற்றிவிட்டீரே !—ஆ ! பக்தர்கள் நினைத்தமாத்திரத்தில், அவர்களபீஷ்டத்தை நிறைவேற்றுவதால், ஆபத்பாந்தவன், அநாதரக்ஷகன், என்று பெயர் பெற்றிருக்கிறீரே !—அக்கருணை உமது ஸொந்த தங்கையிடம் இல்லாமல் போய் விட்டதே ! ஐயோ ! அதுதான் போகட்டுமென்ருல், "அர்ஜுனனை அடக்க ஸுபத்ரையால்தான் முடியும்" என்றும், ஏதாவது நான் கவனமாயிருந்தால், "என்ன ; அர்ஜுனன் ஞாபகம் வந்துவிட்டதோ ? கொஞ்சகாலம் பொருத்துக் கொள்" என்றும், பரிஹாஸம் செய்துகொண்டிருந்த ருக்மணிமதனியின் வாயையும் என் எண்ணத்தை வெளியிடவிடாது கட்டிவிட்டதே !—ஆ ! உலகத்தில் எவ்வளவோ அரசர்களிருக்க, இம்மூதேவியா எனக்கு தகுந்தவனுகத்தோன்றவேண்டும் முத்தண்ணுவுக்கு ?—ஐயோ ! என்காலவித்யாஸத்தால், இவர்கள் புத்தியும் மாறினதுடன், என் நாதனுமா ஊரை விட்டுத் தீர்த்தாடனம் செய்யப் போகவேண்டும் ?—இதுதான் இப்படியென்ருல், எல்லா ராஜகுமாரிகளுக்கும் விவாஹஞ் செய்ய உத்தேசித்தால் ஸ்வயம்வரம் ஏற்படுத்துவது வழக்கமாயிற்றே : அதுபோல் இப்பாபிக்கு ஏற்படுத்தும் பக்ஷத்தில், என் நாதன் அறிந்து கட்டாயம் வருவாரே ! இப்பாபிக்கு அந்த யோக்யதைகூடவா இல்லாமல் போயிற்று ? (ஆத்திரத்துடன்) ஆ ! என் நாதனுக்கு மாலையிடக் காத்திருக்கும் இக்கரங்களா மற்றொருவனுக்கு மாலையிடும் ?—திவ்ய பரிமளங்

கலந்த சந்தனத்தை என் நாதன் மார்பில் பூசக் காத்திருக்கும் இக்கரங்களா மற்றொருவனை ஸ்பரிசிக்கும்?—ஒருநாளுமில்லை, இவ்வுயிரிருக்கும்வரை! ஐயோ! என் நாதன் வரவை எதிர் பார்த்து, இலவுகாத்த கிள்ளைபோலானேனே!—ஹே! நாதா! நான் செய்த மஹத்தான பாபத்தாலல்லவா, தாங்களிந்த ஸமயம் இருக்குமிடம் தெரியாது செய்துவிட்டது.—பக்ஷிகள் ஆஹாரத்திற்காக எவ்வளவு தூரஞ் சென்றபோதிலும், தன் குஞ்சுகள் ஞாபகம் வந்த மாத்திரத்தில் எவ்வளவு வேகமாய் அதன் கூட்டை யடையுமோ, அவ்வளவு வேகமாய், தாங்களிருப்பிடம் தெரியுமாயின், தங்களிடம் வந்துவிடுவேனே!— இப்பாபிக்கு ஒரு வழியும் இல்லாமற் போய் விட்டதே! (சற்று அசைவற்று, மௌனமாயிருந்து) என் வழியில்லை, ஒரு வழியிருக்க?—அதுவே, ஸரி!—நாதா! நானிறப்பதென்னவோ நிச்சயம். தாங்கள் திரும்பி வந்ததும் என் கதியைக் கேள்வியுற்றதுமாவது, "ஐயோ! நம்மைக் காணாததால் ப்ராணனை விட்டாள், ஸுபத்ரை" என்றாவது எண்ணினால், அதுவொன்றே போதுமானதுஎனக்கு! ஆ! ப்ராணகாந்தா!— ப்ராணப்ரியா!—இவ்வளவுதானோஎன்கதி?—ஹா!—(மூர்ச்சையாகிறாள்.)

[ருக்மணி மெல்ல வருகிறாள்.]

ருக்: (ஸுபத்ரையின் ஸ்திதியை கவனித்து, தனக்குள்) எனக்குத் தெரியும் அப்பொழுதே.—(சொல்லிக்கொண்டே அவள் பக்கத்தில் மெதுவாக உட்காருகிறாள்.) இது ஏதோ ஆபத்துத்தான் வரப்போகிறது! யாராயிருந்தாலும் கொஞ்சகாலம் திண்டாடவிட்டுப் பார்க்கிறதுதான் ஸ்வபாவமாய்ப் போய்விட்டது அவருக்கு.—(மறுபடியும் அவள் முகத்தைப் பார்த்து) ஐயோ! நிரம்ப அழுதிருக்கிறாள்போ லிருக்கிறது. உடம்பெல்லாம் சொட்டச் சொட்ட நனைந்திருக்கிறதே!—

ஸு: (மூர்ச்சையில்) ஹா! நாதா! நல்லவேளை இந்த ஸமயமாவது வந்தீர்களே!—க்ஷணம் தப்பினால் அவ்வக்னிக் கிரையாயிருப்பேன்.—

ருக்: ஓஹோஹோ! இவ்வளவு தூரம் வரையில் நிச்சயித்துவிட்டாளா! நல்லவேளை நான் வந்ததிப்போ.

ஸு : போம் நாதா ! என் மனலைப் பரிசோதிக்கிறீர்களோ ? (ருக்மணியைத் தள்ளுகிருள்.)

ருக் : (சிரித்துக்கொண்டு, எழுந்து தனக்குள்) ஸரிதான். இது எனக்கு வேண்டியதுதான்.

ஸு : நாதா ! என்னை எல்லோரும் கைவிட்டதற்கு, நீங்களாவது வந்தீர்களே இந்த ஸமயத்தில் !

ருக் : ஆமாம், வாஸ்தவந்தானே மற்றவர்கள் இருந்தால் அவ்வளவு தோன்ருது ; நாங்களிருவரும் இதைத் தடுக்கவில்லையென்பதை எண்ணித்தான் இவளுக்கு இவ்வளவு துக்கமுண்டாயிருக்கிறது.

ஸு : நாதா ! காலதாமதமாகிறது ; யாரும் பார்ப்பதற்குமுன், சீக்கிரம் புறப்படுங்கள், போவோம்.

ருக் : ஸரிதான், நமது பாணிதான் ! (மறுபடியும் அவள் பக்கத்திலுட்கார்ந்து அவளைப் பார்க்கிருள்.)

ஸு : ஹும் ! என்னுலா தாமஸம் : இதோ புறப்பட்டுவிட்டேன். (எழுந்திருந்து கண்விழிக்கவும், பக்கத்திலுட்கார்ந்திருக்கும் ருக்மணியைக் கண்டதும் தலைகுனிந்தவண்ணம் விம்மி விம்மி அழ ஆரம்பிக்கிருள்.)

ருக் : கண்ணே ! ஸுபத்ரா ! ஏன் அழுகிருய் ?—என்ன நடந்தது ? (அழுகை ஜாஸ்தியாக) இதென்ன இது ! கல்யாணம் கிட்டிப் போச்சு ; ஸந்தோஷமாயிராது, அழுகிருயே ! இது நல்லதா ?— அம்மா ! எதற்காக அழுகிருய் ? என்ன ஸமாசாரம் ? இன்னதென்று எனக்குச் சொல்லு ?

ஸு : (அழுதவண்ணம்) மதனி !—நீங்கள் கூட—இப்படி யிருப்பீர்களென்று—நான் ஸ்வப்பனத்திலும்—எண்ணவில்லை.—கிட்டண்ணுதான் கைவிட்டுவிட்டார்—நீங்களுமா—(மேல் பேசமுடியாது தேம்பித்தேம்பி அழுகிருள்.)

ருக் : (தன் தலைப்பால் அவள் கண்களைத் துடைத்துக் கொண்டே) கண்ணே ! அழாதே. உம் மனஸுப்படியே செய்துவைக்கிறோம் : அழுகையை நிறுத்து.

ஸு: (கொஞ்சம் ஸமாதானமாகி) என்னை இவ்வளவு பாடு படுத்திய பிறகுதான் செய்யவேண்டுமோ?

ருக்: அதெல்லாமில்லை ஸுபத்ரா! பெரியவரோ இதில் பிடிவாதமாயிருக்கிறார்; உன் மனஸின் த்ருடத்தைத் தெரிந்துகொண்ட பிறகல்லவோ, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

ஸு: மதனி! என் மனஸின் த்ருடமா?—சொல்லட்டுமா?

ருக்: வேண்டாம், வேண்டாம். நன்றாய்த் தெரிந்துகொண்டுவிட்டேன். ஆனால், ஸுபத்ரா உன்னை ஒன்றுமாத்திரம் கேட்டுக்கொள்கிறேன்.

ஸு: என்ன மதனி?

ருக்: நான் எல்லா ஸமாசாரங்களையும் சின்னண்ணாவிடம் சொல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொல்கிறேன்: நீ மாத்திரம் என்ன செய்யவேண்டும் தெரியுமா?

ஸு: என்ன?

ருக்: ஸம்மதப்பட்டவள்போல் ஸந்தோஷமாயிருக்கவேண்டும்.

ஸு: ஐயோ மதனி அதை நினைக்கவே என்னை அறியாது எனக்கு துக்கம் வந்துவிடுகிறதே! நானெப்படியிருப்பேன், ஸந்தோஷமாய்?

ருக்: எல்லாம் மேலுக்குத்தானே! பெண்களுக்கு இதென்ன ப்ரமாதம்! எதற்காகவென்றால், இந்த ஸமாசாரம் பெரியவருக்குத் தெரிந்தால் வந்துவிடும் மோசம்!—ஆதலால் இது பரம ரஹஸியமாயிருக்கவேண்டும்.

ஸு: ஸரி!

ருக்: ஸுபத்ரா! காரியம் கைகூடிவர கொஞ்சம் தாமஸப்பட்டால், என்னவோ, தூக்கத்தில் இப்பொழுது பிதற்றினையே, அதுபோல் ஏதாவது பயித்தியக்கார கார்யத்திற்குத் துணிந்துவிடாதே அம்மா.

ஸு : (வஜ்ஜையால்) ஐயையோ—என் மதனி! நீங்கள் நிரம்ப நாழியாய் இங்கிருக்கிறீர்களா என்ன?—நீங்கள் வந்தவுடனே என்னை எழுப்பக்கூடாதா? இப்படித்தான் செய்கிறதோ?

ருக் : அதனுலென்னடீ! நான் கண்ட ஸ்வப்பனங்களுக்கும், நான் பிதற்றின பிதற்றலுக்கும், இது உரைபோடக் காணுமா? அதனுலென்ன.—கண்ணே, நான் வரவா?—(எழுந்திருக்கிருள்.)

ஸு : (எழுந்து) ஆஹா! (ருக்மணி போக எத்தனிக்கிருள்.) நிச்சயந்தானே மதனி?

ருக் : (திரும்பிவந்து) அதிலென்ன ஸந்தேஹம். உன் சின்னண்ணு மனஸு வைத்துவிட்டால் முடியாததுமுண்டோ?

ஸு : வாஸ்தவமே! ஆனுல் அவருக்கு மனஸு வரவேண்டுமே?

ருக் : அவருக்கா? நன்ருயிருக்கு!—அர்ஜுனனுக்கில்லாது வேருெருவனுக்கு உன்னைக் கொடுக்க ஸம்மதிப்பாரா?—உனக்கு ஸந்தேகமே வேண்டாம்.

ஸு : என்னவோ, என் காலவித்யாஸத்தால் அவருக்கப்படி தோன்றிவிட்டால்?

ருக் : ஒருநாளும் தோன்ருது! அப்படியே யிருந்தாலும், நானெருத்தி யிருக்கிறேனே, விட்டுவிடுவேனு?—

ஸு : அதுதான்வேண்டும் மதனி: உங்களைத்தான் நம்பியிருக்கிறேன்.

ருக் : கவலைப்படாதே! நிரம்ப நாழிகையாகிறது : வரவா நான்?

ஸு : ஸரி.—(ருக்மணி கொஞ்சதூரம்போக) நேரே சின்னண்ணு அரண்மனைக்குத்தானே போகிறீர்கள்?

ருக் : (திரும்பி) அங்கேதான் போகப் போகிறேன். (போகிருள்.)

(ஸுபத்ரையும் உட்செல்லுகிருள்.)

அங்கம்—3.

ஸீன் 1.

இடம் :—ப்ரபாஸ தீர்த்தத்தைச் சேர்ந்த வனம்.

(அர்ஜுனன் வருகிறுன்.)

அர் : (ஸ்வகதம்) என்ன ஆச்சர்யம்! தீர்த்த யாத்திரை செய்ய வேண்டிய ஒருவருஷமும் பாதிவழியிலேயே கழிந்துவிட்ட போதிலும், அதிலிருக்கும் உத்ஸாகத்தாலும், ஆநந்தத்தாலும் மிகுதியுள்ள விடங்களைச் சுற்றிப் பார்க்கவேண்டுமென்கிற அவா மேலிட்டதே ஒழிய திரும்பிப் போவோமென்று தோன்றவில்லை.—ஆஹா! எவனுக்குத்தான் தோன்றும்!—கோதாவரி, கிருஷ்ணு, காவேரி, தாம்பிரபரணி முதலிய புண்ய நதிகளில் ஸ்நாநஞ்செய்து, ஆங்காங்கு தானதர்மங்களை விதிப்படி செய்து, அவைகளைச் சார்ந்த புண்ய க்ஷேத்திரங்களிலுள்ள ஆலயங்களைத் தரிசித்து, அந்தந்த க்ஷேத்திரங்களின் மாஹாத்மியங்களைக் காட்டக்கூடிய புராணங்களை ச்ரவணஞ் செய்து கொண்டிருந்தால், எவனுக்குத்தான் ஊர் ஞாபகம் வரும்? ஒருநாளும் வராது! அதனுல்தான் பெரியோர்களெல்லாம் தீர்த்தாடனத்தை விரும்புகிருர்கள். ஏதோ, பூர்வஜன்ம பாக்ய வசத்தால் எனக்கு இப்பாக்யம் ஏற்பட்டதென்றே மதிக்கிறேன்.—ஸரி! இப்ரபாஸ தீர்த்தத்தில், மூன்று தினங்களிருந்து விட்டு இந்திரப்ரஸ்தம் போகவேண்டும்: ஒரு வருஷத்திற்குமேல் அதிக நாட்களாகிவிட்டபடியால், என் ப்ராதாக்களுக்கு என்னைப்பற்றி கவலை அதிஹரிக்கும்: ஆகவே, இனி அதிக நாட்கள் தாமஸிக்கக்கூடாது.

(ஒருபுறம் போகிருன்.)

[மற்ருெருபுறமாக, சிவசங்கரதீக்ஷிதர், ஸாமி கனபாடிகள், ராமச்சந்திரவாஜபேயர், வருகிருர்கள்.]

சி. தீ : நான் அப்பொழுதே சொன்னேன், நாழிகை ஆய்விட்டதென்று; இந்த சாமி சாந்தஸமென்று எனக்கு முன்னையே தெரியும்,

ஸா. க : ஓய் என்னங்காணும் சாந்தஸம்? அப்படியென்றால் ஜபத்தை விட்டுவிடச் சொல்லுகிறுயோ?

ரா. வா : ஓய் என்னங்காணும் ப்ரமாத ஜபம்? நாங்களும் உம்மோடேதானே ஸ்நாநத்துக்கு இறங்கினேம். காரியமல்லவா—கொஞ்சம்—நடைஜபமாய்த்தான் செய்யவேணும்.

சி. தீ : அதுதானே சொல்கிறேன்.—உட்காருகிறதுதானே நாளைக்கு—மூக்கைப் பிடித்துக்கொண்டு—யார் கேட்கிரா—

[அர்ஜுனன் ஓர் பக்கமாய் வந்து கவனிக்கிறுன்.]

ஸா. க : ஓய்! காசுக்காக கர்மாவை விட்டுவிடச் சொல்லுகிறீரா, என்னை?

சி. தீ : உம்மை யாரய்யா விட்டுவிடச் சொல்லுகிறுர்கள். பாரும், 10-நாழிகைக்குமேலாய்விட்டது. த்வாரகை போவதற்குள் பதினைந்துநாழிகை ஆய்விடும்போலிருக்கிறது.—போகிறது காலாகாலத்தில் போனால்தானே நமக்கேதாவது காசு கிடைக்கும்.

அர் : (ஸ்வகதம்) என்ன விசேஷம் த்வாரகையில்? விசாரித்துப் பார்ப்போம். (அவர்கள் ஸமீபம் சென்று) ப்ராம்மணுேத்தமர்களே! நமஸ்கரிக்கின்றேன். எங்கு அவஸரமாய்ச் செல்கிறீர்கள்?

சி. தீ : நாங்களா? த்வாரகைக்குப் போகிறேம்.

அர் : அங்கென்ன விசேஷமோ?

சி. தீ : இது தெரியாதா உங்களுக்கு! அங்கே—பலராமர் க்ரஹத்தில் ஒரு விவாஹம் நிச்சயமாகி, இன்றைக்கு நிச்சயதாம்பூலம்—

அர் : யாருக்கு விவாஹம் நிச்சயமாகியிருக்கின்றதோ?

சி. தீ : அவர் தங்கை—அதான் கோபாலகிருஷ்ணன் தங்கை இருக்கிறுள் அல்லவா?

அர் : ஆம், ஆம் : ஸுபத்ரைக்கா?

சி. தீ : உங்களுக்குத் தெரியுமோ அவர்களை ?

அர் : எனக்கா ?—நான் கேள்விப்பட்டிருக்கிறேன் : உம்—ஸுபத்ரையை யாருக்குக்கொடுப்பதாக நிச்சயித்திருக்கிறார்களோ ?

ரா. வா : துர்யோதன மஹாராஜாவுக்கு !

சி. தீ: அதெல்லாம் நிரம்ப நல்ல ஸம்பந்தம்—

ரா. வா : இரண்டும் தகுந்த இடம்.

ஸா. க : ஏராளமான வைதிகச் செலவு செய்வதாகத் தீர்மானித்திருக்கிறார்களாம் :

சி. தீ : அதுதான் இவர் இவ்வளவு அவஸரமாய்ப் புறப்படுகிறார் !

ஸா. க : ஓய் ! இப்பொழுது நாழிகை ஆகிறதெல்லாம் பாதகமில்லை போலிருக்கிறது. நான் சற்று ஜபம் பண்ணினுல் ப்ரமாதப் பட்டுவிட்டது.

அர் : ஸ்வாமி ! நான் தங்களை தடைசெய்ததற்காக மன்னிக்க வேண்டும்.

சி. தீ : அதனுலென்னப்பா ! நீங்களும் அங்கே வருகிறீர்களோ ?

அர் : இல்லை, இல்லை : நான் வேறிடம் போகப்போகிறேன் :

சி. தீ : அப்படியானுல் ஸரி—வாருமேங்காணும்—ஏறப்பட்ட நாழிகை ஆய்விட்டது—வாருங்கோ, வாருங்கோ—சற்றுவேஹமாய்.

(போகிறார்கள்.)

அர் : (ஸ்வகதம்) ஆஹா ! என்ன ஆச்சரியம் ! "காத்திருந்தவன் மனைவியை நேற்று வந்தவன் கொண்டு போனுன்," என்பதுபோல், பால்யம் முதல் எனக்கே கொடுப்பதாகத் தீர்மானித்திருந்த ஸுபத்ரையை வேறொருவனுக்கு—அதுவும் துர்யோதனனுக்கு—கொடுக்க நிச்சயித்திருக்கிறார்களாமே! —இது வாஸ்தவமாயிருக்குமா ?—ஏனிருக்காது ? தற்காலம் எங்கள் நிலைமையை உத்தேசித்து அவர்கள் எண்ணம் மாறி

யிருக்கலாம்.—யாரிவ்வாறு அபிப்ராயப்பட்டாலும், கிருஷ்ண பரமாத்மா இதற்குட்படுவாரோ?—ஸுபத்ரை மஹா புத்திசாலியாயிற்றே; அவளெப்படி இதற்கு உடன்பட்டனளோ தெரியவில்லையே!—உம்! ஸுபத்ரையை அடையாத ஜன்மம் ஒரு ஜன்மமா?—இதைவிட யான் ஊர் திரும்பாது என் ப்ராணனை விடலாமென்றே மதிக்கின்றேன்.—ஹா! கோபாலகிருஷ்ணு! உம்மைத்தவிர எனக்கு யார் கதி?—பாண்டவர்களுக்கு எந்த ஆபத்துவரினும் அதனினின்று காப்பதாகக் கண்ணன் கங்கணதாரணம் செய்திருப்பதாக உலகம் நினைத்திருப்பது ஸத்யமானுலும், நான் த்ரிகரண சுத்தியாய் உம்மையே சரணமடைந்திருப்பது வாஸ்தவமானுலும், நம்மிருவர்களையும் நரநாராயணர்களென்று ஜனங்கள் எண்ணுவது உண்மையானுலும், இக்ஷணமே ப்ராப்தமாகி என் மனக்குறையை நிவர்த்திக்கவேண்டும். (கைகூப்பி கிருஷ்ணனை ஸ்தோத்திரஞ் செய்கிறுன்.)

[கிருஷ்ணன் ப்ராப்தம்.]

கிரு: அர்ஜுனு! தீர்த்தயாத்திரை முடிந்ததா?—ஊர் ஞாபகங்கூட வந்ததா? அதிலேயும் இப்பொழுதாவது என் ஞாபகம் வந்ததே! அதுவே என் பாக்யந்தான். (அர்ஜுனன் மௌனமாயிருப்பதைப் பார்த்து) என்ன அர்ஜுனு! ஒன்றுக்கும் பதிலைக் காணும்?—ஏன் உன்முகம் ஒருவாறுயிருக்கிறது?

அர்: கிருஷ்ணு! ஏன் ஒன்றுமறியாதவர் போல் இப்படி ஜாலம் செய்கிறீர்கள்!

கிரு: உம்—வாஸ்தவந்தானே!—கிருஷ்ணன் நம் கையிலகப்பட்டுக் கொண்டிருக்கிறுன் என்று, அவனுக்கென்ன கார்யமோ, அவன் என்னவேலையி லிருக்கிறுனே, எந்தஸ்திதியி லிருக்கிறுனே, ராத்திரியோ, பகலோ, இவைகளொன்றையும் கவனியாது, அவனை ஸ்மரிக்கவேண்டியது, அவன் உடனே எந்த அவஸரத்திலிருந்தாலும், அதைப் பாராட்டாது, ஓடிவரவேண்டியது; வந்து என்ன விசேஷம் என்று கேட்டால், "என்ன ஜாலம் செய்கிறுய்" என்று கேட்கிறுய்!—உம்; அது உன்பேரில் குற்றமில்லை!

அர் : (நமஸ்கரித்து) பகவன்! நான் கேட்டது அபசாரம்; என்னை மன்னிக்கவேண்டும். இனி அர்ஜுனன் உங்களைத் தொந்திரவே செய்யமாட்டான்.

கிரு : அதெப்படி?

அர் : அவனிருந்தாலல்லவோ!

கிரு : என்ன அது?

அர் : இறந்துவிட்டால்?

கிரு : என்னடா அது! உனக்கென்ன பயித்தியம் பிடித்து விட்டதா என்ன?

அர் : அதற்கு மேல்தான்.

கிரு : காரணம்?

அர் : காரணமா?—உங்களுக்கொன்றும் தெரியாதோ?—உங்களூரில் ஒன்றும் விசேஷமில்லையா இப்பொழுது?

கிரு : எங்கள் ஊரிலா? விசேஷத்திற்கென்ன குறைவு. அதுவும் கல்யாணநாள் வந்துவிட்டால், யாதவகுலத்திற்கு விசேஷத்திற்கென்ன குறைவு? ஒருவீடு மாற்றி ஒருவீட்டிலே பந்தல்தான், மேளவாத்யந்தான்: அதனாலென்ன?

அர் : கிருஷ்ணா! உம்மைக் கபடநாடக ஸூத்ரதாரியென்பது வாஸ்தவமாகவே இருக்கிறது.

கிரு : ஆமடா அப்பா, உன்பேரி லென்ன குற்றம்: அது என் ஜாதக விசேஷம்.—ஏன், கிருஷ்ணனுடன் சண்டைபிடித்து ஒருவருஷத்திற்குமேலாகிவிட்டதே என்று நினைத்துக்கொண்டு, இப்பொழுது வரவழைத்தாயோ என்னை?

அர் : கோபாலகிருஷ்ணா! இது உமக்குத் தர்ம[illegible]?

கிரு : பின் என்ன?—நீ எதையோ அவ[illegible] நினைத்துக்கொண்டு உரலை இடிக்கிறாய்: எனக்கொன்றும்பு[illegible]யவில்லை—கபடமாய்ப் பேசுகிறது நீ, என்னை கபடி என்று சொல்கிறாய்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக
சென்னை-600 008

அர் : கிருஷ்ணு ! ஸமாசாரத்தை என் வாயினின்றே வரவழைக்க வேண்டும் ; அந்த எண்ணந்தானே உமக்கு ?—ஸரி ; அப்படியே சொல்லுகிறேன் : இவ்வளவுதானே.—ஸுபத்ரைக்கு விவாஹம் நிச்சயமாயிருக்கிறதாமே ?

கிரு : என்னமோ அவளுக்கும் வயஸு வந்துவிட்டதல்லவா ; ஆஹ வேண்டியதுதானே எங்கேயாவது.

அர் : என்ன கிருஷ்ணு, இப்படி பட்டுக்கொள்ளாமல் பேசுகிறீர்களே ?

கிரு : ஆமடா—அதெல்லாம் முத்தண்ணு வியாபாரம் ; எனக்கொன்றும் தெரியாது.

அர் : உமக்கொன்றும் தெரியாதா ? ஆதியில் சொன்னதெல்லாம் மறந்துபோய்விட்டதோ ?

கிரு : என்ன அது ?

அர் : என்ன அதா ? அதுவும் நானே சொல்லவேண்டும் ; அல்லவா ?—ஸரி, சொல்கிறேன், இவ்வளவுதானே.—ஆதியில் ஸுபத்ரையை எனக்குக் கொடுப்பதாகத் தீர்மானித்திருந்ததல்லவா ?

கிரு : ப்சு : ஆமாம் : அதனுலென்ன : என்னவோ முத்தண்ணு இஷ்டம் அப்படி இருக்கிறது. ஸுபத்ரையுந்தான் உனக்கென்ன ப்ரமாதமென்று எண்ணி நானும் அதைப்பற்றி கவனிக்கவில்லை.

அர் : கிருஷ்ணு ! இம்மாதிரி என்னை கைவிடுவீர்களென்று நான் ஸ்வப்பனத்திலும் எண்ணவில்லை.

கிரு : அர்ஜுனு ! இதென்ன இது ! இதற்காகவா இவ்வளவு துக்கப்படுகிறுய் ?

அர் : இதைவிடத் துக்கம் மனுஷ்யனுக்கு வேறென்னவேண்டும்.

கிரு : அதுபோகட்டும்—நீ தீர்த்த யாத்திரை செய்தாயே ; இந்த ஒரு வருஷத்திற்குள் உனக்கெவ்வளவு விவாஹங்கள் ஏற்பட்டன ; சொல் பார்ப்போம்.

அர் : போம் கிருஷ்ணு—அதனல் ?

கிரு : இல்லை—கேட்கிறேன் ; சொல்லக்கூடாதா எனக்கு !

அர் : கங்கையில் ஸ்நானம் செய்ய இறங்கினேன் ஒரு தினம் ; உலூபி யென்னும் ஓர் நாககன்னிகை என்னை ஜலத்திற்குள் இழுத்து நாகலோகத்திற்கு எடுத்துச்சென்று என்னை மணந்தாள்.

கிரு : ஊஹூம் ! கங்காஸ்னன பலன் கைமேல் கிடைத்துவிட்டாற் போலிருக்கிறது !

அர் : போம் கிருஷ்ணு ! என்னை பரிஹஸிப்பதற்குத்தானே என்னைக் கேட்கிறீர்கள்.

கிரு : இல்லை இல்லை : பிறகு ?

அர் : மணலூர் அரசன் சித்திரவாகனன் புதல்வி சித்திராங்கதை யைய மணம் புரிந்தேன்.—இவ்வளவுதான் கிருஷ்ணு.

கிரு : அதிலும் அதிருப்தியா ! ஸரிதான்—ஒரு வருஷத்திற்குள் இரண்டு மனைவிகள். இதுவும் போதாது ஸுபத்ரையும் வேண்டுமோ ? அர்ஜுனு ! இம்மாதிரி எவ்வளவு பேர்வழிகள் கிளம்பியிருக்கிறீர்கள் தீர்த்தயாத்திரைக்கு ?

அர் : கிருஷ்ணு ! ஸுபத்ரைக்குப் பிறகு நான் வேருெரு ஸ்திரீயை யும் விவாஹம் செய்துகொள்வதில்லை. ஆகவே—

கிரு : அடடா ! என்ன வைராக்யம் ! எனக்குத் தெரியாதோ உன் ஸமாசாரம் ! "உருசிகண்ட பூனை உரியை உரியைத் தாவு மாம்" என்பதுபோல், இதற்கென்றே நீ வேண்டுமென்று த்ரௌபதியும் மற்றவர்களில் எவரும் ஏகாந்தமாய் இருக்கும் ஸமயம், அவ்விடம் சென்று, அதைக் காரணமாக வைத்துக் கொண்டு மறுபடி தீர்த்தாடனத்திற்குப் புறப்படமாட்டாயா, ப்ரம்மசாரிகள் கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டிக்க பரதேசம் புறப்படுவதுபோல்.

அர் : கிருஷ்ணு ! புண்ணில் ஊசி எடுத்துக் குத்துவதுபோலிருக் கிறது இப்பொழுது எனக்கு ?—அதென்னவோ, ஸுபத்ரையை

எனக்கே விவாஹம் செய்து கொடுக்கவேண்டும்; இல்லையேல், இதோ உம்முன்னிலையிலேயே என் ப்ராணனை விடப்போகிறேன்.—என்ன சொல்லுகிறீர்கள்?

கிரு: ஸரி ஸரி: இதொரு நல்ல மருந்து வைத்துக்கொண்டிருக்கிறாய்.—நல்ல யுக்தி—அர்ஜுநா! நான் சொல்வதைக் கேள்: விவாஹமென்னவோ நிச்சயமாகி நிச்சயதாம்பூலமும் வாங்கி ஆய்விட்டது; இனி அதற்கு மாறுதலாக நடக்கலாமா; நீயே யோஜித்துப்பார்?

அர்: எனக்கு அதெல்லாம் தெரியாது: அப்படியென்றால் உம்மால் முடியாதா? சொல்லிவிடுங்கள் அதையாவது?

கிரு: சொன்னால்? ப்ராணத்யாகம் செய்துவிடுவாயோ?

அர்: அதிலும் ஸந்தேஹமா?—உமக்கு வேண்டுமாயின் ஸத்யம் செய்து கொடுக்கவா?

கிரு: இது நன்றாயிருக்கிறதே!—அர்ஜுநா! வீண் பிடிவாதம் பிடிக்காதே.

அர்: கிருஷ்ணா! இன்னமுமா என்னை பரீக்ஷிக்கிறது? உம்மை இரந்து வேண்டுகிறேன்.

கிரு: இதென்னடா கஷ்டம்!—உம்—உன்னால் என்னென்ன அவமானம் வரப்போகிறதோ வரட்டும்; என்ன செய்கிறது—ஸரி: அர்ஜுநா! அப்படியாயின், நான் சொல்லுகிறபடியெல்லாம் நடக்கவேண்டும் நீ. என்ன?

அர்: அதிலென்ன ஸந்தேஹம்; எது சொன்னாலும் கேட்கிறேன், ஆனால்—

கிரு: ஸுபத்ரையை மாத்திரம் விவாஹம் செய்து வைக்கவேண்டும்.

அர்: அவ்வளவுதான்.

கிரு: ஸரி—நீ இப்பொழுதே ஸந்யாஸியாகவேண்டும்.

அர் : ஸரிதான் ! இது நல்ல யுக்தி : ஏனென்ருல், ஸன்யாஸியாய்விட்டால், பிறகு, ஸன்யாஸிக்குப் பெண்டாட்டியா என்று அடித்து வெருட்டலாமென்ரு ?

கிரு : ஸரி, அப்படியாயின் உன் இஷ்டம் ; நான் வருகிறேன்.

அர் : இல்லே இல்லே : கோபித்துக் கொள்ளாதீர்கள் : பின் ஸன்யாஸம் எதற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் ?

கிரு : அதையெல்லாம் கேட்கக்கூடாது ; நான் சொல்லுகிறபடி கேட்கவேண்டும்.

அர் : கேட்கிறேன், கேட்கிறேன் ; எப்படியாவது—

கிரு : அதற்குத்தான் சொல்லுகிறேன்.

அர் : ஸரி ஸரி : பிறகு ?

கிரு : ஏனென்ருல் :— " काषाय दण्डमात्रेण यतिःपूज्यो न संशयः " (காஷாய தண்ட மாத்ரேண யதிப்பூஜ்யோ நஸம்சயஹ) என்பதுபோல் அந்த வேஷம்தான் தகுதியானது, பிறர் சந்தேஹிக்காமலிருக்க. ஆதலால், நீ த்ருதண்ட ஸன்யாஸ வேஷந்தரித்து, ஸமீபத்திலுள்ள ரைவதபர்வத குகையி லிருப்பாய் : கிரி பூஜை உத்ஸவத்திற்காக நாங்கள் அங்கு வரப்போகிருேம் ; பிறகு ஆகவேண்டியவைகளுக்கு அப்போதைக்கப்பொழுது சொல்லுகிறேன்.

அர் : கிருஷ்ணு ! நானெங்கு போவது காஷாயத்திற்கும் தண்டத்திற்கும் ?

கிரு : எல்லாம் கொண்டுவந்திருக்கிறேன் உனக்கென்றே.

அர் : பார்த்தீர்களா ! என்னை இவ்வளவு நேரம் கண்கலங்கச் செய்துவிட்டீர்களே ; உங்களை கபடநாடக ஸூத்ரதாரி என்றதற்கு மாத்திரம் கோபங்கொண்டீர்களே ! இது நியாயமா ?

கிரு : அர்ஜுனு ! உள்ளதை உரைத்தால் எவருக்கும் கோபம் வருவது ஸகஜம்தானே ; மேலும், ஒரு பதார்த்தத்தைக் கஷ்டப்

பட்டு ஸம்பாதித்தால்தான், அதனிடம் அதிக அபிமானமிருக்கும்; அதற்கும் கவுரதையிருக்கும்.—அல்லவா ?

அர் : ஸரி : வேஷம் போட்டுக்கொள்ளுகிறேன் ; பிறகு ?

கிரு : நீ எவருடனும் பேசக்கூடாது ; "மௌனம் ஸர்வார்த்த ஸாதனம்" என்பதுபோல் நீ பேசாமலிருக்கவேண்டும் : எவரேனும் உன்னை வந்து நமஸ்கரித்தால், "நாராயண ! நாராயண !" என்றுமாத்திரம் சொல், போதுமானது.—தெரியுமா ?

அர் : அப்படியே.

கிரு : ஸரி, வா !—காலதாமதமாகிறது.

(கிருஷ்ணன் போகிறார் : அர்ஜுனன் பின்தொடர்கிறான்.)

ஸீன் 2.

இடம் :—ராஜவீதி.

(சாம்புவன் தண்டோரா அடித்தவண்ணம் வருகிறான்.)

சாம் : இதனால் சகலமான ப்ரஜைகளுக்கும் அறிவிப்பது யாதெனில் : நாளைமுதல் ரைவத மலையண்டை கிரிபூஜை உச்சவம் துவக்கப்போவுது ; எப்பொளுதும்போலே, தச்சினையென்ன, சோறென்ன, பாட்டுக்கச்சேரியென்ன, பாவதர் கதையென்ன, தாசிகள், கேளிக்கை, *பின்னல் கோலாட்டம், ராட்டன ஊஞ்சல், இதுகளென்ன,—எல்லாம் நடக்கப் போவுது. அங்கிட்டு வரும் எல்லா சாதிகளுக்கும் அவுங்க அவுங்களுக்குத் தக்கபடி பரிசுகள் அளிக்கப்படும் ; எல்லோரும் தவராமே வந்திடணுமென்று மவராசா கட்டளை.

(தண்டோராவை மறுபடி அடித்தவண்ணம் போகிறான்.)

ஸீன் 3.

இடம் :—உத்ஸவ மண்டபம்.

[பலராமன் வீற்றிருக்க கிருஷ்ணன் வருகிறுர்.]

பல : வா ! உட்கார்.

கிரு : (உட்கார்ந்து) அண்ணு ! என்ன விசேஷம், என்னே அழைத்தது ?

பல : கிருஷ்ணு ! இந்நேரம் எங்கிருந்தாய் ?

கிரு : ப்ராம்மணர்களுக்கு ஸம்மானமளிக்குமிடத்தில் இருந்தேன்.

பல : சற்று முன்பாக நான் அங்கு வந்தபொழுது உன்னேக் காணவில்லேயே ?

கிரு : நீங்கள் வந்தபொழுதா ? அதற்குச் சற்றுமுன்பாகத்தான் வேறிடம் போயிருந்தேன்.

பல : எங்கே ?

கிரு : இல்லே—கோபிகைகள் "நாங்கள் பின்னற் கோலாட்டம் போடப்போகிறேும் ; தாங்கள் சிறிது நேரமாவது வந்திருந்து போகவேண்டும்" என்று மிகவும் வற்புறுத்தினுர்கள்—

பல : ஸரிதான் — வற்புறுத்துவானேன் உன்னே — கேள்விப்பட்டாலே போதாதா உனக்கு !—அது போகட்டும், ரைவத பர்வத குஹையில் ஓர் பால்ய ஸன்யாஸி வந்திருக்கிறுராம் : அவரை இக்ஷணமே நாம் தரிசிக்கவேண்டும்.

கிரு : இப்பொழுது என்ன அண்ணு அவஸரம் ! உத்ஸவமுடிந்து ஊர் திரும்பும்பொழுது பார்த்துக்கொள்வோமே ?

பல : கிருஷ்ணு ! உனக்கெப்பொழுதும் அலக்ஷிய புத்திதானே ! நம் ஸவுகரியப்படி அவர்களிருப்பார்களா ? மேலும், நம் காதில் விழுந்தபிறகு அவர்களே தரிசிக்காமலிருந்தால் மஹத்தான பாபமல்லவா ?

கிரு : ஸரி அண்ணு, தங்களிஷ்டம். உங்களுக்கு எப்பொழுதும் ஸன்யாஸிப்ரமை ஜாஸ்தி : அவன் வாஸ்தவ ஸன்யாஸியோ, கபட ஸன்யாஸியோ ? யார் கண்டார் ?

பல : கிருஷ்ணு ! உனக்கு வர மனமில்லையென்று சொல்லிவிடேன். அதற்காகப் பெரியோர்களை ஏன் இகழ்ந்து பேசுகிருய்.

கிரு : ஸரி அண்ணு ; பேசவில்லை, இதோ புறப்பிட்டுவிட்டேன்.

பல : ஸரி : உன் மதனி, ருக்மணி, ஸுபத்ரை, இவர்களை எல்லாம் அழைத்துச் செல்லவேண்டும்.

கிரு : அண்ணு ! நான் ஏதாவது சொன்னுல்மாத்திரம் கோபம் வருகிறது உங்களுக்கு. ஸன்யாஸிகளைத் தரிசிக்க அவர்களெல்லாமெதற்கு ?

பல : கிருஷ்ணு ! உனக்கு சற்றேனும் பக்தி ச்ரத்தை என்பதே இல்லை. எதற்கும் இம்மாதிரியே தடுப்பது என்று வைத்துக் கொண்டிருக்கிருய்.

கிரு : ஸரி அண்ணு ! தங்களிஷ்டம். வாருங்கள் புறப்பிடுவோம்.

(இருவர்களும் போகிருர்கள்.)

ஸீன் 4.

இடம் :—ரைவதபர்வதம்.

(ஸன்யாஸி வேடம்பூண்ட அர்ஜுனன் ஓர் கற்பாறையின்மீதிருக்கிருன்.)

அர் : (ஸ்வகதம்) இது என்ன இது ! இவ்விவஷமிராவிடில் இந்த உத்ஸவங்களின் வேடிக்கைகளையாவது பார்த்துப் பொழுதைப் போக்கலாமே ! அதுவும் முடியாது செய்துவிட்டார்—ஒருவருடனும் பேசக்கூடாதென்றுவேறு சொல்லிவிட்டார்—நல்ல ஆஹாரம் நல்ல நித்திரை இல்லாமற்போய்விட்டது—இம்மாதிரி எவ்வளவு காலம் இருக்கவேண்டுமோ தெரியவில்லையே—உம், உத்ஸவமோ முடிவடையப்போகிறது ; ஸுபத்ரையை அடைந்தபாடில்லை—கிருஷ்ணு ! இவ்விதம் என்னை அவமானப்

படுத்துகிறதென்று வெகு நாட்களாய்ப் ப்ரதீக்ஷித்துக்கொண்டிருந்தீரோ?—ஸுபத்ரையைக் கேட்டதற்கு தண்டனையா இது?—ஐயோ! யக்ஷ, கந்தர்வ, நாககன்னிகைகளெல்லாம் என்னழகில் ஈடுபட்டிருக்க, ஸுபத்ரைக்காக யான் இவ்வளவு அவஸ்தைப்படுவதா? (திரும்பிப் பார்த்து) ஓஹோ! யாரோ வருகிறார்போலிருக்கிறது. (கற்பாறையில் அசையாது கண்களை மூடியவண்ணம் வீற்றிருக்கிறான்.)

[பலராமன், கிருஷ்ணன், ரேவதி, ருக்மணி, ஸுபத்ரை கையில் பழங்கள் நிறைந்த தட்டேந்தியவண்ணம், வருகிறார்கள்.]

பல: (கிருஷ்ணனுடன்) ஆஹா! என்ன தேஜஸ்! என்ன காந்தி! கிருஷ்ணா! தவத்தின் மஹிமையைப் பார்த்தனையா?

கிரு: என்ன தெரிகிறதண்ணா?

பல: கந்தமூலபலாதிகளைப் புஜித்தும், ஸூர்யவெப்பம், மழை, பனி இவைகளால் உபத்ரவிக்கப்பட்டும், இவரது தேஜஸ் குறையாது விருத்தியாவதென்றால், இவரது தபோ மஹிமையை என்னவென்றுரைப்பது!

கிரு: அதுகளெல்லாம் இல்லையண்ணா! ஸமீபகாலமாகத்தான் ஸன்யாஸம் செய்துகொண்டிருக்கவேண்டும்: அதனாற்றான் உடம்பு வாடவில்லை. எல்லாம் இன்னும் பத்து தினங்கள் சென்றால் தெரியும், இவர் தேஜஸ்!

பல: அடாடாடாடா (காதுகளைப் பொத்தி) என்ன வார்த்தை சொல்கிறாய்? அபசாரம், அபசாரம்: உன்னை யான் இங்கழைத்து வந்ததே தவறு. வா, நமஸ்கரிப்போம்.

கிரு: (தனக்குள்) உம்—என்ன செய்கிறது, இதொருகாலம்.

அர்: (பலராமன் நமஸ்கரிக்க) நாராயண.—(கிருஷ்ணன் நமஸ்கரிக்க லஜ்ஜையால் மௌனமாயிருக்கிறான்.)

பல: (கிருஷ்ணனுடன் ரஹஸ்யமாய்) பார்த்தனையா! வேண்டும் உனக்கு. "நான் நினைத்தது தவறென்று" நினைத்துக்கொண்டு மறுபடி நமஸ்கரி: உம்—

கிரு: (ஸ்வகதம்) இது ஏதடா! இவன் ஸங்கோசப்படப்போக, நமக்கு தண்டனையா—இரண்டு தடவை. (முகஜாடையால், அர்ஜுனனை அதட்டி மறுபடி நமஸ்கரிக்கிறுர்.)

அர்: நாராயணா:

பல: உம்—ரேவதி.

அர்: (ரேவதி நமஸ்கரிக்க) நாராயணா.

ருக்: (கிருஷ்ணனிடம் வந்து ரஹஸ்யமாக) நானும் நமஸ்கரிக்கவேண்டுமோ?

கிரு: அதிலென்ன ஸந்தேஹம்! நானே செய்தேனே; அதுவும், எல்லோரும் ஒருமுறை, நான் இரண்டுமுறை.

ருக்: என்ன நாதா! தெரிந்து செய்வதென்றுல் கூச்சமாயிருக்கிறது.

கிரு: பயித்தியமே! அவனுக்கா? அதோ பார்! எல்லாம் அக்ஷயத்திற்கும், தண்டத்திற்கு மல்லவா.—உம், தாமதிக்காதே; அண்ணுவுக்கு கோபம் வந்துவிடும்.

அர்: (ருக்மணி நமஸ்கரிக்க) நாராயணா.

பல: எங்கு, ஸுபத்ரா?

அர்: (ஸுபத்ரை, பழத்தட்டை முன் வைத்து நமஸ்கரிக்க, அவளையே பார்த்த வண்ணம்) நாராயணா, நாராயணா; ஸுபத்ரா, நாராயணா—(கிருஷ்ணன் அர்ஜுனனை விழித்துப்பார்க்க, அதற்கு "தப்பிதம்; மன்னிக்கவும்" என விளங்க முகக்குறியால் காட்டுகிறுன்.)

பல: (கைகூப்பி) ஏதோ—இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன்; உத்தரக்ஷணமே வந்தேன்: மறுபடி நாளைவந்து கண்டு கொள்கிறேன்; எங்கள்மீது கிருபை கூர்ந்து (பழங்களைக் காட்டி) அங்கீகரித்து எங்களை ஆசிர்வதிக்கவேண்டும்.

அர்: (ஸுபத்ரையைப் பார்த்தவண்ணம்) நாராயணா.

பல: உத்திரவு பெற்றுக்கொள்ளுகிறேம்.

அர் : நாராயணா.

(எல்லோரும் அர்ஜுனனை ப்ரதக்ஷிணம் செய்து போகிறார்கள்.)

அர் : (ஸுபத்ரையையே பார்த்துக்கொண்டு அவளைப் பின் தொடருவது போல், பாறையினின்று இறங்கிச் சற்று தூரம் சென்று, மனவருத்தத்தால் அவள் போன திசையை நோக்கிப் பார்த்தவண்ணம், தனக்குள்) ஆ! மறைந்தனளே! கிருஷ்ணா! என்னை இவ்வவஸ்தையில் விட்டுப் பார்ப்பதில் உமக்கொரு ஸந்தோஷமா? ஆஹா! என்ன ரூபம்! இவ்வுத்தமியை ஸ்ருஷ்டிக்க அழகிய சந்திரன் தான் சதுர்முகனானனோ? அல்லது ச்ருங்கார ரஸத்தைக் கரை கண்ட மன்மதன்தான் ப்ரம்மனானனோ? தெரியவில்லையே— உம்: வேதாப்யாஸத்தால் ஜடனாயும், விஷயாதிகளில் பற்றற்றவருமான, ப்ரம்மாவுக்கு, இம்மனோஹர ரூபத்தை ச்ருஷ்டிக்க சக்தி எவ்விதம் ஏற்பட்டதோ தெரியவில்லையே! ஆஹா! த்ரிமூர்த்திகளும் இவளைக் காணில், இவளுக்கீடுபடுவார்களென்றால், கேவலம் மனுஷ்யனாகிய என்னால் இவளது பிரிவு எவ்வாறு பொறுக்கமுடியும்.—ஐயோ! இக்காஷாயமல்லவோ என்னைக் கெடுக்கிறது! என்ன செய்வேன்!—கோபாலகிருஷ்ணா! இக்காஷாயமாகிற அக்னி ஜ்வாலையால் சூழப்பட்டு ஒரு வழியும் போகமுடியாமல் யான் தபிப்பதை, ஆநந்தமாய்ப் பார்த்துக்கொண்டிருப்பது உமக்கு தர்ம நியாயமாகுமா?— ஹா! ஸுபத்ரா! பெண் ராஜ ஹம்ஸமானது தாமரைத்தண்டிலுள்ள நூலை எவ்வாறு இழுத்துச் செல்லுமோ, அவ்வாறு என் மனதைக் கொள்ளை கொண்டு விட்டாயே; உன்னை யான் அடைய பாக்யம் பெறுவேனோ?—ஏது—எனக்குத் தோன்றவில்லை—(மூர்ச்சையாகிறான்.)

ஸீன் 5.

இடம் :—உத்ஸவ மண்டபம்.

[பலராமனும் கிருஷ்ணனும் இருக்கிறார்கள்.]

பல : கிருஷ்ணா! நேற்றுடன் உத்ஸவம் முடிந்துவிட்டதே; ப்ரஜைகள் யாவரும் த்வாரகை திரும்பிவிட்டார்களா?

கிரு : அனேகமாய் எல்லோரும் நேற்றே புறப்பட்டுவிட்டார்கள்; மிகுதியுள்ளவர்களும் புறப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பல : ஸரி : அந்த யதீச்வரரை சிறிதுகாலம் த்வாரகையில் வைத்திருந்து அவரைப் பூஜிக்கவேண்டுமென்று எண்ணுகிறேன்.

கிரு : ஸரியாய்ப்போய்விட்டது : நிரம்ப நன்றாயிருக்கின்றதே! ஸன்யாஸிகளை ஒருபொழுதும் க்ரஹத்தில் வைத்துக் கொள்ளக் கூடாதென்பது தங்களுக்குத் தெரியாதா?

பல : நீ சொல்வது ஸாதாரண ஜனங்களுக்கு. அரண்மனையில் வைத்துக்கொள்வதற்கென்ன? மேலும், யதிகளை கன்யாமடத்தில் வைத்து கன்னிகைகளைக்கொண்டு சிசுருஷை செய்விப்பது நமது முன்னோர்களால் ஆசரிக்கப்பட்ட புராதன தர்மம்.

கிரு : ஸரிதான்! அவர்களையே அரண்மனையில் அணுகவிடக்கூடாதென்கிறேன்; கன்யாமடத்தில் வைக்கவேண்டுமென்கிறீர்கள்! அதுவும் இவரோ நல்ல யுவா; வேறு வினை வேண்டியதில்லை.

பல : உனக்கெப்பொழுதும் பிறரைப்பற்றி ஸந்தேஹிப்பதே வழக்கமாய்விட்டது.

கிரு : அண்ணு! தாங்கள் எல்லாமறிந்தவர்களென்றாலும், ஸன்யாஸிகளைக் கண்டால் உங்கள் புத்தி மாறிவிடுகிறது. மேலும், அவருடைய பார்வைகளையும், முகவிகாஸங்களையும் நான் கவனித்த வரையில், அவர் கபடஸன்யாஸியோவென்றுகூட எனக்குத் தோன்றுகிறது.

பல : நீ கபடி; அதனல் உனக்கப்படித் தோன்றுகிறது.

கிரு : அண்ணு! நான் தடுத்து வாதாடுகிறேன் என தாங்கள் நினைக்கக்கூடாது; அன்று, ஸுபத்ரை நமஸ்கரித்தபொழுது, "ஸுபத்ரா நாராயண" என்று சொன்னதை தாங்கள் கவனித்தீர்களா?

பல : கவனித்தேன் : அதனுலென்ன?

கிரு : அவள் நாமதேயத்தை எதற்காகக் கூறவேண்டும், ஸன்யாஸியாயிருக்கிறவருக்கு ?—ஆதலால், இவன் ஏதோ நம்மைச்சேர்ந்தவனாக இருத்தல் வேண்டும் ; ஏதோ கெட்ட எண்ணங்கொண்டு இவ்வேஷம் பூண்டிருக்கவேண்டும்.

பல : நாராயண, நாராயண. என்ன அக்ரமம் ! "ஸுபத்ரா" என்றால், அதிருஷ்டசாலி என்று அர்த்தம் ; அதற்காக அவ்வார்த்தையைக்கூறி அவர் ஆசீர்வதிக்கப்போக, இம்மாதிரி அவரை தூஷிக்கின்றாயே.

கிரு : எனக்கென்ன ? பிறகு ஏதாவது நேர்ந்தால் அப்பொழுதே சொல்லக்கூடாதாவென்பீர்கள் என்று இப்பொழுது எச்சரித்தேன் ; பிறகு உங்களிஷ்டம்.

பல : ஸரி ஸரி : நீ சென்று அவரை அழைத்துவரவேண்டும்.

கிரு : ஆஹா அப்படியே செய்கிறேன்.

ஸீன் 6.

இடம் :—ரைவத பர்வதச்சாரல்.

(அர்ஜுனன் சித்தப்ரமைகொண்டவன்போல் வருகிறான்.)

அர் : (ஸ்வகதம்) ஹா : ஸுபத்ரா ! உன்னை யான் மறுபடி எப்பொழுது காண்பேன் ?—ஐயோ ! மின்னலைப்போல் மறைந்துவிட்டாயே ! இக்கஷ்டகால வேஷத்தால் உன்னை ஸரியாகக்கூடப் பார்க்க முடியாமற் போய்விட்டதே பாபி என்றனக்கு !—ஐயோ ! நீ இருக்குமிடம் தெரிந்தால் இக்காஷாயத்தைக் கிழித்தெறிந்துவிட்டு உன்னிடம் ஓடிவந்து விடுவேனே !—ஸுபத்ரா ! நீ ஏன் இங்கு வந்தாய் ? உன்னைப் பாராமலிருந்தால், உன்னை அடையவேண்டுமென்ற துக்கத்துடனிருப்பேனே ; இப்பொழுது, இப்பாபி அநங்கனால், அங்குசத்தால் அடிக்கடி குத்தப்பட்ட யானையைப்போல், யான் தபிக்கிறேனே !—ஓஹோ ! இதோ இப்பாறையின்மீது உட்கார்ந்து என் காதலி போன திசையை நோக்கிக் கத்துகிறது இம்மயில் ! இதைக் கேட்கிறேன் :— ஹே, மயிலே ! என் காதலி ஸுபத்ரை

போன திசையை நோக்கிக் கூவுகிருயே; அதனுல், அவளிருக் குமிடம் நீ அறிவாய்போலிருக்கிறது: அவளிருக்குமிடத் தைக் காட்டுவாய்—சேய்! இதென்ன எனக்கு பதில் கூருமல் மிகுந்த ஸந்தோஷத்துடன் தோகையை விரித்தாடுகிறதே!— உம்—இது இச்சமயம் ஸந்தோஷப்படக் காரணம் யாது?— ஓஹோ! அறிந்து கொண்டேன்: என் காதலி என் ஸமீபத் தில் இல்லாததால், இதனழகிய தோகைக்கு ஸமானமாய் என்னிடம் ஒன்றுமில்லையென்றல்லவா, என்னை பரிஹஸிக்கி றது! ஆஹா! க்ரீடாகாலத்தில் என் ஸுந்தரியின் கொண்டை அவிழ்ந்து மலர்களுடன் பரவியிருக்கும்பொழுது காணின், இம்மயில் என்ன செய்ய வல்லது! சேய்—இப்பச்சாத்தாப மற்ற பக்ஷியைக் கேளேன்.—ஆ! இதோ நாவல் மரத்திலுட் கார்ந்திருக்கும் கோகிலத்தைக் கேட்டாலல்லவோ அது கூறும்: என் கண்மணி ஸுபத்ரையின் குரலையொத்த கோகிலமே! காமிகள் உன்னை மன்மதனுக்கு தூது செல்பவளென்று கூறு கிருர்களல்லவா: ஆகையால் என்காதலியை என்னருகே அழை த்துவா; அல்லது, என்னையேனும், அவளிடம் அழைத்துச் செல்.—சேய்—இஃதென்ன, என் வார்த்தையைக் கவனியாது தன் காரியத்திலேயே கண்ணுயிருக்கிறது! பிறருடைய துக் கம் பெரிதேயாயினும், ஸ்வகார்ய துரந்தரர் அதை கவனியாது, தான் ஆநந்தமாய்க் காலம் கழிப்பதுபோல், இப்பறவை, தபி த்துக்கொண்டிருக்கும் என்னை ஆறுதல் சொல்வதுவிட்டு, மிகு ந்த மமதையுடன் நாவற்பழத்தைப் புஜிக்க ஆரம்பித்துவிட் டதே! ஹே! கோகிலமே! என் காதலியின் அதரபானஞ் செய்ய யான் கொடுத்துவைக்கவில்லையென்று பரிஹஸிக்கி ருயோ, துஷ்டை!—ஒ! அதோவிருக்கும் அன்னத்திற்குத் தான் தெரியும்.—ஹம்ஸமே! நில் நில்: சற்றுப் பொறுத்து மானஸ ஸரஸுக்குச் செல்லலாம்: என் காதற்கினியாளின் விருத்தாந்தத்தைக்கூறி என்னைக் கரையேற்றுவாய்; ஏனெனில் பெரியோர்கள், தன் கார்யத்தைவிட தனது நண்பர்கள் காரியத் தையே முதன்மையாகக் கொள்வார்கள்: ஆகவே—ஓஹோ! "நான் போகிற அவஸரத்தில் உன் காதலியை யார் பார்த்தது" என்பதுபோலிருக்கிறதே!—ஏன் இவ்வாறு பொய்யுரைக்கி ருய்? என் காதலியை நீ பார்த்திராவிடில், நீ எவ்வாறு அவ ளுடைய அழகிய நடையைக் கற்றுக்கொண்டாய்?

[கிருஷ்ணன் வந்து மறைவாக நிற்கிறார்.]

திருடியதுமன்றியில், பொய் வேறு சொல்லலாமா நீ? ஹம் ஸமே! திருடின குற்றத்திற் சபாதமாகவாவது என் காதலி யினிருப்பிடம் கூறுவாய்?—ஓ ஹோ! "திருட்டுத்தனம் வெளியாய்விட்டது; இவன் திருடர்களைத் தண்டிக்கும் அரசன்" என்று தெரிந்துகொண்டு பயந்து ஓடிவிட்டதே!

கிரு: (தனக்குள்) பித்தம் தலைக்கு வலுவாய்ஏறிவிட்டது; ஸரிதான்,—அர்ஜுனா!

அர்: (திடுக்கிட்டு) கிருஷ்ணா!

கிரு: இங்கென்ன செய்துகொண்டிருக்கிறாய்?

அர்: கோபாலா! என்னை இப்படித்தான் செய்வதோ?

கிரு: உன்னை யார் என்ன செய்துவிட்டார்களிப்போ!

அர்: எனக்கிந்த வேஷம் வேண்டாம் கிருஷ்ணா.

கிரு: ஸுபத்ரை வேண்டாமென்றால், இதுவும் வேண்டாம்.

அர்: பின், இச்சனியனால் ஸுபத்ரையை நன்றாகக்கூடப் பார்க்க முடியவில்லை.

கிரு: அதுவேறுகுறைவா!—ஹும்—அச்சமயம் நீ பார்த்த பார்வைக்கும், உன் முகம் மாறினதற்கும், காமவிகாரத்தால் உன் முகம் வியர்த்ததற்கும், யார் என்ன கேட்கிறார்கள் என்றுகூடத் தெரியாது ஸுபத்ரையையே பார்த்துக்கொண்டு மெய்மறந்திருந்ததற்கும், ஸந்யாஸி ப்ரமைகொண்ட முத்தண்ணாவைத் தவிர வேறு எவராயினும் ஸரி, நீ படும்பாடு வேறு; இதில் "நன்றாய்க்கூடப் பார்க்கமுடியவில்லை" என்றுசொல்லுகிறாய்? பேஷ்!—ஸரி; இங்கு எவருடனேயோ பேசிக்கொண்டிருந்தாயே; யார் அது?

அர்: போம், கிருஷ்ணா!—குழந்தையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகிறீரே! இன்னம் என்மீதில் இரக்கம் வரவில்லையா?

கிரு : உம்—உம்பாடுதான் தசையாயிருக்கின்றதே! வா என் பின்; த்வாரகைக்குப் போகவேண்டும்.

அர் : அங்கும் இந்த வேஷத்துடனு?

கிரு : அடாடாடா! வேஷமில்லாவிடில் விவாஹமேது! பேசாமல் வா சொல்லுகிறேன். (இரண்டொருஅடி எடுத்துவைத்து, திரும்பி) ஸரி; அஃதென்ன நான் உன்னை நமஸ்கரித்தேனே; முதலில் மௌனமாயிருந்துவிட்டாயே; அஃதென்ன அவ்வளவு திமிரா உனக்கு?

அர் : இல்லை, கிருஷ்ணு! என்னுல் நமஸ்கரிக்கப்படவேண்டிய தாம் நமஸ்கரிக்கையில் எனக்கு மிகவும் லஜ்ஜை உண்டாய்விட்டது.

கிரு : ஆனுல், அந்த ஸந்தர்ப்பத்திற்கு, அதுவும் நல்லதாய் முடிந்தது. இனி அப்படியெல்லாம் இருக்கக்கூடாது; வெகு உஷாராயிருக்கவேண்டும்; தெரியுமா?

அர் : ஸரி. இன்னும் எவ்வளவு காலம் இப்படி இருக்கவேண்டும் கிருஷ்ணு?

கிரு : எல்லாம் ஸமயம் வரும், சொல்லுகிறேன். வா போவோம்.

[போகிறுர்கள்.]

அங்கம்—4.

ஸீன்—1.

இடம் :—கன்யாமடம்.

[பலராமன், அர்ஜுன ஸன்யாஸியை அழைத்துவந்து, ஒரு மேடையில் உட்காரவைக்கிறுர். கிருஷ்ணன் மெள்ள வருகிறுர்.]

பல : கிருஷ்ணு! எங்கே ஸுபத்ரை முதலானவர்கள்?

கிரு : வந்துகொண்டிருக்கிறுர்கள்.

[ரேவதி, ருக்மணி, ஸுபத்ரா முதலானவர்கள் வருகிறுர்கள்.]

[அர்ஜுனன் ஸுபத்ரையைக் கடைக்கண்ணால் பார்த்து பெருமூச்சு விடுகிறான்.]

பல : என்ன காலதாமதம்? ஸ்தல சுத்தி செய்து இலையைப்போடு. ஸுபத்ரையே பரிமாறட்டும்.

[அர்ஜுனன் மனதிற்குள் மகிழ்ந்துகொள்கிறான்.]

கிரு : உம்—பருத்தி புடவையாய்க் காய்க்கிறது!

பல : எங்கே?—இலை போட்டாயதா?

0-1,892 MVR
my

ரே : இதோ—

[ஸுபத்ரை அர்ஜுனன் எதிரில் இலையைப் போடுகிறாள். தீர்த்த பாத்திரத்தை எடுத்துவந்து ஸ்தல சுத்தி செய்ய அர்ஜுனன் எதிரில் நிற்க, அவன் இலையை எடுக்கவேண்டுமென்பதைக் கவனியாது, அவளையே பார்த்தவண்ணமிருக்கிறான்.]

பல : கிருஷ்ணா! பார்த்தனையா! இலையை எடுக்கவேண்டுமென்று கூட கவலையற்றிருக்கிறார். இம்மாதிரி பரமயோகியை யான் இதுவரை பார்த்ததில்லை!

கிரு : (ஸ்வகதம்) ஆமாமாம்! இதுவரை இம்மாதிரி யோகி இருந்தால்தானே; இது அலாதி யோகி!

18192

பல : ஸுபத்ரா! நீயே இலையை எடுத்து ஸ்தல சுத்தி செய்.

[ஸுபத்ரை இடதுகையால் இலையை எடுத்து வலதுகையால் தீர்த்தத்தைத் தெளித்து ஸ்தல சுத்தி செய்து, இலையை அதன்மேல் போட்டு, அதிலும் ஜலம்தெளித்துத் துடைத்து, பஞ்சபாத்திரத்தைப் பக்கத்தில்வைத்து, நெய் எடுத்துவந்து பாத்ராபிகாரம் செய்து போகிறாள்.]

கிரு : (ஸ்வகதம்) ஏது இவன் ஸாதத்தைக்கூட ஊட்டச் சொல்வான் போலிருக்கிறதே! அண்ணாதான் பூராவாக மயங்கிவிட்டார்; ஆஸாமிபாடு கொண்டாட்டந்தான்!

பல : (ஸுபத்ரையைப் பார்த்து) ஏன் நிற்கிறாய்? பரிமாறு சீக்கிரம்.

கிரு : என்ன அண்ணா! ஸுபத்ரை குழந்தைதானே; அவளுக்கென்ன தெரியும்? இன்றைக்காவது எல்லோரும் பரிமாறட்-

டும்; நாளைமுதல் வேண்டுமென்றால் ஸுபத்ரை செய்யட்டுமே!

பல: கஷ்டந்தான்! பெரியோர்களுக்கு சிசுரூஷை செய்கிற பாக்யம் கிடைப்பது ஸுலபமா? ஸரி: எல்லோரும் பரிமாறுங்கள்; சீக்கிரம். (மூவரும் பரிமாறி அன்னம் வைத்தபிறகு, கைகட்டி வாய்பொத்தி மெள்ள ஸமீபஞ்சென்று) பரிஷேசனஞ்செய்யலாமே.

அர்: நாராயண! (பரிஷேசனஞ் செய்கிறான்.)

பல: எங்கே! உம்—[ஸுபத்ரை குழம்பு எடுத்துப் பரிமாற, அர்ஜுனன் அவளைப் பார்த்துக்கொண்டே ஒன்றை மற்றொன்றுடன் தாறுமாறாய்க் கலக்கிறான்.] பார்த்தனையா, கிருஷ்ணு! இவரல்லவோ மஹான்!

கிரு: (ஸ்வகதம்) ஆமாமாம்:—மஹான்!—மஹானைப் பார்க்கவில்லை; மான் என்று சொன்னாலும் ஒத்திருக்கும்: ஏனென்றால், அதன் கண்களைப் போலவே இவன் கண்கள் ஸஞ்சலிக்கிறது.

பல: பார்த்தாயா! எல்லாவற்றையும் ஒன்றாகக் கலப்பதைப் பார்த்தால், எல்லாம் ஒன்றாக பாவிக்கும் பரம யோகியல்லவா இவர்!

கிரு: ஆமாமாம்! ஒன்றையே நினைத்து ததேகத்யானத்திலிருக்கிறாரல்லவா!

ஸீன் 2.

இடம்:—பலராமன் அரண்மனை.

[பலராமன் வீற்றிருக்க கிருஷ்ணன் வந்து பக்கத்தில் நிற்கிறார்.]

பல: கிருஷ்ணு! த்வீபில் நடக்கப் போகும் மஹேச்வர பூஜை மஹோத்ஸவத்திற்கு புறப்படவேண்டுமே?

கிரு: ஆம்; அதற்கென்ன புறப்பட்டுவிடுவோம்.

பல: நம் அரண்மனையிலிருக்கும் யதியை மறந்தனையோ?

கிரு: அதற்குத்தான் நான் அப்பொழுதே சொன்னேன்:—இதுகளையெல்லாம் இழுத்துப்போட்டுக்கொள்ளக்கூடாதென்று.

பல : அதனால் குற்றமில்லை : அவரையும் அழைத்துச் செல்வோம்.

கிரு : ஸரிதான்—"காசிக்குப் போயும் சனீச்வரன் பின்னுடன்" என்பதுபோல் வேடிக்கையாயும் உத்ஸாகமாயு மிருக்குமிடத்தில், ஸன்யாஸியை எவராவது வைத்துக்கொள்வார்களா ?

பல : பின் என்னசெய்கிறதென்கிறாய் ?

கிரு : செய்வதென்ன ?—போகச்சொல்லிவிடுகிறது.

பல : அடடா! சாதுர்மாஸ்யம் முடியும்வரை வேறிடம் போகலாமா ? அதைவிட பாபம் வேறென்னவிருக்கிறது ! அவரிங்கேயே இருக்கட்டும்; சிசுரூஷைக்கு ஸுபத்ரையைமாத்திரம் இங்கு வைத்துச் செல்வோம்.

கிரு : அண்ணா ! நான் ஏதாவது சொன்னால் உங்களுக்குக் கோபம் வந்துவிடுகிறது ; நீங்களோ கார்யாகார்யங்களை யோஜிக்காமல் சொல்லுகிறீர்கள்.—

பல : என்ன ?

கிரு : எங்காவதுண்டா !—அவரோ நல்ல யுவா ; ஸுபத்ரையோ யுவதி—இவர்களிருவரையும் தனித்து வைத்துப் போவோமென்கிறீர்களே ! நம் நகரத்திலேயோ, ஈ காக்காய் இருக்கப் போகிறதில்லை ; ஏதாவது அஸந்தர்ப்பம் நேர்ந்துவிடுமாயின் நமக்கெவ்வளவு மானக்குறைவு வந்துவிடுமென்பதைக் கொஞ்சமேனும் யோஜியாது சொல்லுகிறீர்களே.—

பல : கிருஷ்ணா ! நீ ஆதிமுதல் இவ்விதமே தடுத்து வாதாடிக்கொண்டு வருகிறாய். அம்மஹானைப்பற்றி இவ்விதம் அவதூறாய்ப் பேசினால் உன் நாவழுகிவிடும், தெரியுமா ?

கிரு : அண்ணா ! நீங்களெல்லாமறிந்தவர் ; இருந்தபோதிலும், நாளை ஏதாவது நேர்ந்துவிட்டால், இந்த யாதவ குலத்திற்கே அழியா அபகீர்த்தி ஏற்பட்டுவிடும் ; அச்சமயம் "அவர்தான் சொன்னாரென்றால், உனக்கு எங்கே போயிற்று புத்தி" என்று ஸகலரும் என்னை ஏசுவார்கள். அதற்காக நான் எடுத்துரைத்தேன் ; பிறகு தங்களிஷ்டம்.

பல : அவ்வாறு ஸ்வப்பனத்திலும் நடவாது ; நான் தீர்மானித்த படியேதான் நடத்தவேண்டும்.

கிரு : ஸரி :

பல : வா போவோம் :

(இருவரும் போகிறார்கள்.)

ஸீன் 3.

இடம் :—கன்யாமடம்.

[அர்ஜுனன் ஓர் லதாக்ரஹத்தில் வீற்றிருக்கிறான்.]

அர் : (ஸ்வகதம்) ஐயோ ! கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கழுபவன் கதிபோ லல்லவா இருக்கிறது என்கதி !—ஸுபத்ரையோ மிகுந்த பக்தி ச்ரத்தையுடன் சிசுருஷை செய்துவருகிறாளெனக்கு ; அவள் சரீரம் ச்ரமப்படுவதைப் பார்க்க என் மனம் ஸஹிக்கவில்லை ; வேண்டாமென்று தடுப்போமென்றாலோ, அவளைப் பார்த்துக்கொண்டிருக்கும் பாக்யங்கூட இல்லாமற் போய்விடுமே என்று சும்மாவிருக்கவேண்டியதாயிருக்கிறது.—ஐயோ ! என்னால் எக்குறையும் சொல்ல முடியாது. அடிக்கடி வந்து எனக்குவேண்டியவைகளையெல்லாம் அவள் செய்துகொண்டிருந்தும், இந்த ஸ்வல்ப அவகாசங்கூட அவளைப் பாராமல் இருக்க முடியவில்லையே ; என்னசெய்வேன் !—ஹே ! கிருஷ்ணா ! இன்னும் எத்தனை காலம் இவ்வவஸ்தையி லிருப்பதுயான் ? ஐயோ ! என்னை இன்னதென்று வெளிப்படுத்திக்கொள்ளவும் முடியவில்லையே இச்சமயம் !—ஆ ! ஸுபத்ரா ! என் உபசரணைக்காக நீ உட்சென்றாலும், அப்பிரிவு என்னால் பொறுக்கமுடியவில்லையே ; நீ ஸதா என் பக்கலிலேயே இருப்பாயாகில் எனக்கு பசி தாக மொன்றுமே எற்படாதென்பது திண்ணம் ; ஆனால், இவ்வெண்ணத்தை உன்னிடம் வெளியிடமுடியாது தபிக்கின்றேன் : என்ன செய்வேன் ! மல்லிகை மலராகிய உன்னைக் கசக்கி முகருகிறேன், பாபி !—ஆ ! அதோ வருகிறாள் என் காதலி ! என்னிடம் போகிறேன். (மேடையில் உட்காருகிறான்.)

[ஸுபத்ரை பால் நிறைந்த பாத்திரமேந்தி வருகிறாள்.]

ஸு : (ஸ்வகதம்) ஹா ! ஜகதிசா ! மஹான்களுக்கு அந்தரங்க பக்தியுடன் சிசுருஷை செய்தால், அது ஒருநாளும் வீணாகாது, அவர்கள் மனோரதங்கள் யாவும் நிறைவேறுமென்று, பெரியோர்கள் சொல்லுகிறார்களே ! நான் த்ரிகரண சுத்தியாய் இம்மஹானுக்கு சிசுருஷை செய்து வருகிறேன். இன்னும் என் நாதனைப் பார்க்கும்படியான பாக்யம் ஏற்படவில்லை.—ஐயோ ! பாபி துர்யோதனனுக்கு என்னை விவாஹஞ்செய்து கொடுப்பதாகக் குறிக்கப்பட்ட தினம் ஸமீபித்துவிட்டதே ! என் மதனி ருக்மணியின் உறுதிமொழிகளாலல்லவோ, நானின்னும் உயிர் தரித்திருக்கிறேன். எனக்கு நற்காலம் வருமோ, வராதோ, எனக்குத் தெரியவில்லை.—(திடுக்கிட்டு) ஆ ! பால் கொண்டு வந்தவள் காரியத்தைக் கவனியாது, என் கவலையிலாழ்ந்து நின்றுவிட்டேனே ! ஐயோ ! காலதாமதமானதைப்பற்றி அவரென்ன எண்ணுவாரோ ! அபசாரம் : அபசாரம்.

(அர்ஜுனன் ஸமீபம் சென்று, பாலை ஆற்றி வைத்துவிட்டு, தலைகுனிந்து நிற்கிறாள்.)

அர் : ஸுபத்ரா ! வெகு நேரமாய் உன்னைக் காணவில்லையே ?

ஸு : (பயந்து) ஸ்வாமி ! மன்னிக்கவேண்டும் : சற்று தாமதமாய் விட்டது. தேவரீர் என்னை அழைத்தீர்களோ ?

அர் : இல்லை, இல்லை. (பாலை அருந்துகிறான்.)

ஸு : எனக்கு உத்திரவா ?

அர் : (ஸ்வகதம்) அதற்குள்ளாகவா ! (ப்ரகாசம்) ஸுபத்ரா ! எனக்கு வியர்க்கிறது ; கொஞ்சம் விசிறுகிறதுதானே !

ஸு : இதோ, ஸ்வாமி. (விசிறியை எடுத்து விசிறுகிறாள்.)

அர் : (ஸ்வகதம்) ஐயோ ! கணக்கில்லாத தாஸிகள் கைகட்டிக் காத்திருந்து, இவளுக்கு விசிறுவதுபோக, பாபி யான், இவள் என்னெதிரே இருக்கவேண்டி, செந்தாமரையொத்த இவளது கரத்திற்கு ச்ரமம் கொடுக்க எண்ணிவிட்டேனே ; என்ன தவறு ?—சே ! என் புத்திஹீனம் !—ஸுபத்ரா ! போதும்.

ஸு : (விசிறியை வைத்து) ஸ்வாமி நான் வரவா ?

அர் : ஸ—ரி—(ஸுபத்ரை போகிருள்.) ஆஹா ! ஒன்றைப் பார்க்கின் மற்ருென்றுக்காகிறதில்லை ! என்ன செய்வேன் ! (சொல்லிக் கொண்டே தன்னையறியாது ஆஸனத்தைவிட்டெழுந்து, ஸுபத்ரை போன திசையை நோக்கி வருகிருன்.)

[கிருஷ்ணன் எதிராக வருகிருர்.]

கிரு : யதீச்வரரே ! என்ன, எல்லாம் ஸரிவர நடந்துவருகிறதா ?

அர் : கேட்கமாட்டீர்களா நீர் ?—கிருஷ்ணு ! உயிரை வைத்து என் உடலை வதைக்கிறீர்களே ! இது நியாயமா ?—தர்மமா ?

கிரு : என்ன குறைவு உனக்கு ?

அர் : என்ன குறைவா ! அதிக பசியுடனிருக்கும் ஒருவன் முன்பு அன்னபானுதிகளை வைத்து, அதை புஜிக்கவொட்டாது, கைகளைக் கட்டிவிட்டால் அவன் எவ்வாறு தபிப்பனே, அவ்வாறு என்னைத் தபிக்கவிடுகிறீரே, இது போதாதா ?

கிரு : ஆய்விட்டது, ஆய்விட்டது ! உனக்கதிருஷ்டம் ஸமீபித்துவிட்டது !—நாங்களெல்லோரும் மஹேச்வர உத்ஸவத்திற்கு, ஸமுத்திரத்திலுள்ள த்வீபுக்குப் போகப்போகிருேம் ;—

அர் : எல்லோருமா ?

கிரு : ஆம் எல்லோரும்தான்.

அர் : ஸுபத்ரை கூடவா ?

கிரு : இல்லை இல்லை : பயப்படாதே. இங்கு ஸுபத்ரை மாத்திரமிருப்பாள். ஆகவே, இனி உன் ஸாமர்த்தியம் ; எனக்குத் தெரியாது. ஆனல், உனக்கெப்பொழுது இதைவிட்டு ஸுபத்ரையை எடுத்துச் செல்லலாமென்று தோன்றுகிறதோ, அச்சமயம் என்னை ஸ்மரித்தால், என் ரதம் வாசலில் வந்து நிற்கும்.—நேரமாகிறது, நான் வருகிறேன்.

[சொல்லிக்கொண்டே போய்விடுகிருர்.]

அர் : (ஸ்வகதம்) அடடா ! சில விஷயங்களைப்பற்றி கேட்கவேண்டுமென்று எண்ணியிருக்க, நான் பதிலுரைப்பதற்குமுன் மறைந்துவிட்டனரே !—கிருஷ்ணா ! இதுவுமுன் லீலைகளில் ஒன்ளே ?—உம்—அவர்கள் திரும்புமுன் ஸுபத்ரையை எடுத்துச் செல்லலாமென்று உத்திரவளித்துவிட்டார்—நாளைய தினமே ஏன் எடுத்துச் செல்லலாகாது ?—ஐயோ ! அவள் உள்ளத்தை அறியாது அவளை எடுத்துச் செல்வதில் என்ன ப்ரயோஜனம் ! அதைப்பற்றி கேட்பதற்குமுன் போய்விட்டாரே கிருஷ்ணன் ! கோபாலா ! இவ்வேஷங்களன்னியில் ஸுபத்ரையை எனக்கு விவாஹம் செய்து கொடுப்பது உம்மால் முடியாத காரியமா ? இல்லை. கோபிகைகளைத் தபிக்கச் செய்து அதைப் பார்த்தானந்திக்கும் கோபாலனல்லவா நீர் !—ஓஹோ ! அதோ ஸுபத்ரை வந்துகொண்டிருக்கின்ருள். (போய் தன் ஆஸனத்தில் அமருகிருன்.)

[ஸுபத்ரை பழத்தட்டைக் கையில் ஏந்தி வருகிருள்.]

ஸு : (ஸ்வகதம்) இதுவென்ன ஆச்சரியம் ! த்வீபில் நடக்கும் உத்ஸவத்திற்கு எல்லோரும் போய்விட்டார்கள் ; என்னைமட்டும் இவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருக்கும்படி விட்டுச் சென்ருர்கள் ; நானெவ்வாறு தனித்திருக்கிறது ? இவர் மஹானுயிருந்தபோதிலும் கொஞ்ச நாட்களாய் என்னிடம் ஸம்பாஷிக்கும் வார்த்தைகளைப்பற்றி யோஜிப்பேனுகில் என் மனதிற் கேதோ ஸம்சயம் ஏற்படுகிறது ; மேலும், ருக்மணிமதனி போகும்பொழுது கூறிய சில வார்த்தைகளைக்கொண்டு என் மனஸில் ஏற்பட்ட ஸந்தேஹம் அதிஹரிக்கிறது ; இவைகளைத் தவிர்த்து, இவரது ரூபத்தையும், பின்னழகையும், இவர் விரலில் தனுஸாலழுத்தப்பட்ட வடுக்களையும், கவனிக்குங்கால், இவரே என் நாதனுயிருக்குமோவென்று தோன்றுகிறது :—உம், மதனியின் கபட வார்த்தைகளையும், என்னைமட்டும் தனித்து இவ்விடம் விட்டுச்சென்றிருப்பதையும், இவரது ரூபஒற்றுமையும் யோஜித்தால் ஏதோ இதில் சூதிருப்பதாகவே தோன்றுகிறது. ஜகதீசா ! இதுவே வாஸ்தவமாயிருக்கலாகாதா ! (சற்று யோசித்து) ஐயோ ! என்ன அபசாரம். (இரண்டு கைகளாலும் கன்னங்களில் அடித்துக்கொண்டு) இது வாஸ்தவமல்லாம

லிருக்கும் பக்ஷத்தில் நானிவ்வளவு நாட்கள் செய்த சிசுருஷைகளின் பலனெல்லாம் வியர்த்தமாய் விடுமே!—அபசாரம்! அபசாரம்! (அர்ஜுனன் ஸமீபஞ்சென்று அவன் முன் தட்டை வைக்கிறாள்.)

அர் : ஸுபத்ரா! நீ இனி இங்கேயிருக்கலாம்; ஏனெனில் எல்லோரும் உத்ஸவத்திற்குப் போய்விட்டார்கள்; நீ தனித்து அந்தப்புரத்திலிருக்கவேண்டாம்.

ஸு : அவ்வாறே ஆகட்டும் ஸ்வாமி.

அர் : உனக்குப் பொழுது போவதற்காக, கதைகள் வேண்டுமென்றால் சொல்கிறேன். இப்படி உட்கார்.

ஸு : (லஜ்ஜையால்) பாதகமில்லை; நிற்கிறேன்.

அர் : ஸுபத்ரா! இனி என்னேரமும் இங்கிருக்கவேண்டியதால், நீ நிற்பது தகாது; நான் அனுமதி கொடுக்கும்பொழுது உனக்கேன் ஸந்தேஹம்; உட்கார்.

ஸு : (லஜ்ஜையால் சற்று தயங்கி) சற்றுப் பொறுத்து உட்காருகிறேன், ஸ்வாமி.

அர் : என்னிடமென்ன ஸங்கோசம்!—உட்கார்; பாதகமில்லை—என் வார்த்தையை நீ தட்டலாமா? (ஸுபத்ரை ஓர் ஆஸனத்திலுட்கார) ஸுபத்ரா! உன்னை ஒன்று கேட்கலாமென்று எண்ணுகிறேன்?—

ஸு : என்ன ஸ்வாமி? எதுவாயிருந்தபோதிலும் கேட்கலாம்.

அர் : இல்லை—உன் முகத்தைப் பார்த்தால் ஏதோவொரு கவலையிலாழ்ந்திருப்பதாகத் தோன்றுகிறது; அது என்னவென்று எனக்குரைக்கலாமா?

ஸு : ஸ்வாமி! எனக்கென்ன கவலை; ஒன்றுமில்லையே.

அர் : ஒன்றுமில்லையா! ஏன் வீணில் மறைக்கிறாய்; என்னிடம் சொன்னால்—

ஸு : யாரிடம் சொல்லி என்ன ப்ரயோஜனம்! என் கவலை தீராக் கவலை.

அர் : அவ்வண்ணம் எண்ணுவது தவறு. என்னிடம் கூறுவாய், ஸங்கோஜத்தை விடுத்து? அனேகமாய் அக்காரியம் என்னால் முடியுமென்றே தோன்றுகிறது—ஸங்கோஜப்படாதே?

ஸு : (தனக்குள்) எவ்வாறுரைப்பேன் இவரிடத்தில்?—ஆனால் இவராக வலுவில் கேட்கிறபடியால் சொல்வதிற்றான் என்ன தவறு? நாம் ஸந்தேஹப்படுவதும் இதனால் வாஸ்தவம் அல்லது பொய்யென்பது வெளிப்பட்டாலும் படலாம்.—உம்; நாமெண்ணியவாறு இல்லாமற் போய்விட்டால்? அப்பொழுதுந் தானென்ன; இவர் யோக மஹிமையால் என் நாதனிருப்பிடத்தை அறிந்து சொல்லட்டுமே.—

அர் : ஸுபத்ரா! கூறமாட்டாயா?

ஸு : ஸ்வாமி! நான் தங்களை ஒரு ஸமாசாரம் கேட்கலாமா?

அர் : எதுவேண்டுமென்றாலும் கேள் தாராளமாய்?

ஸு : இல்லை—தாங்கள் பல தேசங்கள் சுற்றி வருகிறீர்களே; இந்திரப்ரஸ்தம் போயிருக்கிறீர்களோ?

அர் : (ஸ்வகதம்) மனமே! அதைர்யப்படாதே! அதிருஷ்டம் கிட்டும்போலிருக்கிறது!—உம்—போயிருக்கிறேன்.

ஸு : அப்படியாயின் பாண்டவர்களைத் தெரியுமோ?

அர் : நன்றாய்த் தெரியும்!—அவர்களைப்பற்றி என்ன?

ஸு : இல்லை—அவர்களது தாய் குந்திதேவி என் அத்தை.—குந்திதேவி ஸவுக்கியமாயிருக்கிறார்களா?

அர் : ஸவுக்கியமாயிருக்கிறார்கள்; ஆனால் நான் அங்கு சென்று ஒரு வருஷத்திற்குமேலாகிறது.

ஸு : ஒரு வருஷத்திற்குமேலாகிறதா!

அர் : ஆம்.

ஸு : அப்படியாயின், அவள் புத்திரர்களுள் மத்ய பாண்டவர்—

அர் : உம், உம், அர்ஜுனன்—

ஸு : அவர்தான்—அவர் ஏதோ காரணம்பற்றி தீர்த்தயாத்திரை போயிருக்கிருராமே அதன் விஷயம் தங்களுக்கு—

அர் : நன்ருய்த் தெரியும்.

ஸு : தெரியுமா ?

அர் : நானச்சமயம் அங்குதானிருந்தேன் ; என்னுடன்தான் புறப் பட்டான் அவன்.

ஸு : அப்படியா !—அவரிப்பொழுது ?—

அர் : நானும் அவனும் சேர்ந்துதான் ஸ்தலங்களெல்லாம் சுற்றி னேம் ; திரும்பி ப்ரபாஸ தீர்த்தம் வந்தோம்.

ஸு : இப்பொழுது அங்கா இருக்கின்ருர் ?

அர் : இல்லை.

ஸு : பின் எங்கு சென்ருரோ ?

அர் : அதுதான் அவன் கூறவில்லை.

ஸு : ஆனல் அவரிப்பொழுதிருக்குமிடம் தங்களுக்குத் தெரியாது போலிருக்கிறது ?

அர் : ஸுபத்ரா ! அவனைப்பற்றி உனக்கேன் இவ்வளவு கவலை ?

ஸு : ஒன்றுமில்லை—ஊர் போய்ச் சேர்ந்துவிட்டாரோ இல்லையோ வென்று கேட்டேன்.

அர் : அவன் இன்னும் ஊர் போய்ச் சேரவில்லை.

ஸு : எதனல் கூறுகிறீர்கள் ?

அர் : அவனுடன் ஸம்பாஷித்துக்கொண்டிருந்ததிலிருந்து.

ஸு : பின் எங்குச் செல்வதாகக் கூறினரோ ?

அர்: அதுதான் அவன் கூறவில்லையென்றேனே.

ஸு: ஸரிதான்.

அர்: ஸுபத்ரா! அவனிப்பொழுதிருக்குமிடம் தெரியவேண்டுமா உனக்கு?

ஸு: (அதிக ஆவலுடன்) ஆம், ஸ்வாமி.

அர்: அவனிருக்குமிடம் தெரிந்துகொள்ளவேண்டியது அவச்யமாயின், என் ஞானதிருஷ்டியால் அறிந்து கூறலாம்.

ஸு: அப்படியாயின் அடியாள்மீது கிருபைகூர்ந்து, அறிந்து சொல்லுங்கள் ஸ்வாமி.

அர்: ஸரிதான்—அவனைப்பற்றி உனக்கெதற்குத் தெரியவேண்டுமென்று கூறினல் நான் பார்த்துச் சொல்லுகிறேன். (ஸுபத்ரை லஜ்ஜையால் மௌனமாயிருப்பதைப் பார்த்து) ஸங்கோஜப் படவேண்டாம்: சொல்?

ஸு: (தனக்குள்) சொல்வோமென்றாலும் பயமாகவிருக்கிறது; சொல்லாமல் மறைத்தாலும் இவரெப்படியும் அறிந்து கொள்வார்; கடைசியில் நாம் மறைத்ததுதான் மிஞ்சும்—உம்—

அர்: என்ன ஸுபத்ரா! என்னிடம் கூற என்ன லஜ்ஜை?

ஸு: ஸ்வாமி! எனக்குரைக்க லஜ்ஜையாயிருக்கிறது; நீங்கள் முதலில் பார்த்துச் சொல்லுங்கள்; பிறகு—(லஜ்ஜாபினயம்)

அர்: (ஸ்வகதம்) இனி என்ன ஸந்தேஹம்! (ப்ரகாசமாய்) ஸரி! பார்த்துச் சொல்லுகிறேன். (கையை மூக்கின் நேராகப் பிடித்து கண்களை மூடிச் சற்றிருந்து) ஸுபத்ரா! அவனும் த்வாரகை நோக்கித்தான் வந்திருக்கிறுன்.

ஸு: (வெகு ஆவலுடன்) த்வாரகையை நோக்கியா!

அர்: ஆம்.

ஸு: இப்பொழுது எங்கிருக்கிறுர் தெரியுமா ஸ்வாமி?

அர் : பார்த்துச் சொல்கிறேன். (முன்போல் செய்து) ஸுபத்ரா! இங்குதானிருக்கிறன்.

ஸு : (திடுக்கிட்டு சரேலென எழுந்து) இங்கா?—எங்கே?

அர் : (எழுந்து அவள் ஸமீபஞ்சென்று) உன் ஸமீபத்தில்தான்.

ஸு : பரிஹாஸிக்கிறீர்களே ஸ்வாமி!

அர் : ஸுபத்ரா! உனக்கு நாதனுகவேண்டுமென்று தவஞ்செய்கிறவன் உன் பக்கலில் நிற்க, ஏன் நான் சொல்வதை பரிஹாஸமென்று எண்ணுகிறுய்?

ஸு : (தனக்குள்) இதுவென்ன! இவர் ஸம்பாஷிப்பதைப் பார்த்தால் இவரையே குறிப்பதுபோலல்லவா இருக்கிறது?—நான் ஸந்தேஹித்தபடி இவரேதான் என் நாதனே?—உம்—அவ்வாறிருக்குமாயின் இவர் ஏன் "நான்தான் அர்ஜுனன்" என்று கூறுது மறைபொருளாக ஸம்பாஷிக்கவேண்டும்—உம்—

அர் : என்ன யோஜிக்கின்றுய்? துர்யோதனனுக்குக் கொடுப்பதாக நிச்சயித்திருக்கிறுர்களே யென்று?

ஸு : உம்—அவர்கள் நிச்சயித்திருந்தால் எனக்கென்ன?

அர் : அப்படியாயின் உனக்கிஷ்டமில்லையோ அவனை மணக்க?

ஸு : இவ்வுயிரிருக்குமளவும் அதற்கு ஸம்மதிக்குமோ; ஒருக்காலுமில்லை.

அர் : முஹூர்த்தம் ஸமீபித்துவிட்டதே; என் செய்வாய்?

ஸு : அதை உத்தேசித்துத்தான் அவ்வளவு ஆவலுடன் தங்களைக் கேட்டது, அவரெங்கிருக்கிறுரென்று?

அர் : அதற்குள் அவன் வாராவிடில்?

ஸு : அதைப்பற்றி முன்பே தீர்மானஞ் செய்துவிட்டேன்.

அர் : என்ன?

ஸு : என்னுயிரைவிட.

அர் : (தனக்குள்) என்ன த்ரட வைராக்யம்! ஆஹா! இவளல்லவோ உத்தமி! இருக்கட்டும்: இவளிடத்தில் சற்று விளையாட்டாக ஸம்பாஷித்துப் பார்ப்போம். (ப்ரகாசமாய்) உம்—என்ன ஸுபத்ரா? ஆத்மஹத்தி செய்துகொள்வது மஹா பாபம்; ஆகவே நான் சொல்வதைக் கேள்.

ஸு : என்ன ஸ்வாமி?

அர் : என்னவென்றால்—துர்யோதனனையோ உனக்கு மணக்க இஷ்டமில்லை; அர்ஜுனனோ இனி வருவானென்பது நிச்சயமில்லை.—

ஸு : ஏன் ஸ்வாமி! சற்று முன்பாக இங்கிருப்பதாகக் கூறினீர்களே?

அர் : யார்!

ஸு : அவர்தான்—

அர் : அவனைப்பற்றியா கூறினேனென்று எண்ணினாய்?

ஸு : (முகம் மாறி) பின்?

அர் : "அவன்தானோ இவன்" என்று எண்ணும்படியாக, ஸகல விதத்திலும் அவனுக்கு ஸமானமானவன்.

ஸு : அது யார் ஸ்வாமி?

அர் : யாரா! உன்னழகில் ஈடுபட்டு, உன்னை அடைய இக்கோலங் கொண்டு, உன்னருகில் நிற்கும்—

ஸு : (கரங்களால் செவி பொத்தி) ஆ! ஸ்வாமி! என்ன வார்த்தை உரைக்கின்றீர்கள்!—என் மனதைப் பரீக்ஷிக்கவா இம்மொழிகள்?

அர் : இல்லை, ஸுபத்ரா! இது ஸத்யம்—என்னை நம்பு.

ஸு : ஸ்வாமி! இவ்வண்ணம் தங்களைப்போலொத்த மஹான்கள் மனதிலும் தோன்றக்கூடாது; தாங்களிதுகாறும் காயக்லேசம்

செய்து புரிந்துவரும் அரும் தவமெல்லாம் அனலிற்பட்ட பரு த்தியைப்போல் பறந்துவிடும்: திரும்ப அதை அடைவதென் ருல் ஸாத்யமா?—மேனகையைக் கண்டு மோஹித்த விச்வா மித்ரர் பட்டபாடு தெரியாதா தமக்கு.—

அர்: ஸுபத்ரா! நீ எண்ணுவதுபோல் நான் தபஸ்வியுமல்ல; அத் தவக்கோலமுமல்ல; இது—உன்னையடையவே எடுத்த வேஷமிது.

ஸு: பின், நீர் யார்?

அர்: நான் க்ஷத்ரியனே; நானும் ஓர் அரசகுமாரன்தான்.

ஸு: உம் நாமதேயமென்னவோ?

அர்: என் பெயரா? அதைப் பிறகு உரைக்கிறேன்—உன் ஸம்மதத் தைக் கூறுவாயாகில், இக்ஷணமே உன்னை என் ராஜ்யத்திற்கு எடுத்தேகுவேன்.

ஸு: நீர் யாவராயினும் ஸரி: என் மனம் இனி மாரு. ஆகவே வீணுக—

அர்: ஸுபத்ரா? நீ மஹா புத்திசாலியென்று கேள்விப்பட்டிருக் கிறேன். அவ்வாறிருக்க, வீணுக ப்ராணத்யாகம் செய்து கொள்வது தகாது. ஸுபத்ரா! நான் ஆத்ம ஸ்தோத்திரம் செய்துகொள்ளுகிறதாக எண்ணக்கூடாது: நானெவ்விதத் தில் அர்ஜுனனைவிட கீழ்ப்பட்டவன்? என்னைப் பார்த்தவர் கள் அர்ஜுனனென்றே எண்ணுகிருர்கள்.—

ஸு: நீர் அவருக்கு ஸமானருயிருந்தாலென்ன; அல்லது அவரை விட பதின்மடங்கு மேற்பட்டவராயிருந்தாலென்ன? பதியாக ஒருவரை வரித்த பிறகு, மற்றவரைப் பார்த்து மனம் மாறி ஞல் அவள் உத்தம ஸ்திரீ யாவாளா — பதிவ்ருதையா அவள்?

அர்: நீ சொல்வதெல்லாம் விவாஹமான பிறகுதான்: ஸுபத்ரா! உன்னை துர்யோதனனுக்கு விவாஹம் செய்து கொடுப்பதாக நிச்சயித்து அம்முகூர்த்தம் ஸமீபித்துவிட்டது; அர்ஜுனனே

இனி வருவானென்பது நிச்சயமில்லை.—ஆகவே, நீ இம்மாதிரி பிடிவாதம் பிடிக்காது என்பேரில் கிருபை செய்வாய். (அவள் ஸமீபஞ்சென்று) ப்ரியே! என்னால் இனி அரை க்ஷணங்கூட பொறுக்க முடியாது.

ஸு : (விலகி) சீ! நீ அணிந்துகொண்டிருக்கும் காஷாயத்திற்காக இதுவரை மரியாதை வைத்தேன்—எட்டி நில்; வீணாகக் கெட்டுப் போகாதே!

அர் : ஸுந்தரீ! நீ என்னை தூஷித்தாலும் ஸரி; பூஷித்தாலும் ஸரி: உன்னையே கதியெனக் கருதிவிட்டேன்; இனி என்னைக் கைவிடலாகாது; என்பேரில் கிருபை வைப்பாய்.

ஸு : அடே! யாரென்று எண்ணினாய் என்னை? ஏதோ தனிமையாக விருக்கிறாள்; இச்சமயம் எதுவேண்டுமென்றாலும் செய்யலாமெனக் கருதுகிறாயோ?—கம்ஸாதி அஸுரர்களை ஹதஞ்செய்த கண்ணனின் தங்கையாக்கும் யான்—இப்பொழுது அவரை யான் ஸ்மரிப்பேனாகில் உத்தரக்ஷணமே ப்ராப்தமாகி உன்னை என்ன செய்வார் தெரியுமா?—வீணான இத் தூர்எண்ணங்களை விடு.

அர் : ஸுபத்ரா! கண்ணனுக்கும் பயமில்லை அவரண்ணனுக்கும் பயமில்லை; ஆனால், ஒருவனுக்குமாத்திரம்தான் பயப்படுகிறேன்; அவன் விடும் பாணங்களைத்தான் பொறுக்க முடியவில்லை; அவனினின்றும் காப்பாற்ற உன்னைத் தவிர வேறெவராலும் முடியாதாதலால் உன்னைச் சரணமடைகிறேன்—கண்ணே—ஸுபத்ரா?

ஸு : அட, சண்டாளா! பசுவின் தோலைப் போர்த்துவந்த புலியைப்போல் ஸமயம் பார்த்து என்னைக் கெடுக்க எத்தனிக்கிறாயே, பாபி.

அர் : உன் கோபத்தால் உனது முகம் மாறியிருப்பதும் ஓர் அழகாக எனக்குத் தோன்றுகிறது; உனது கொடுமையான சொற்களும் என் மனதிற்கு ஒரு உத்ஸாகத்தைத் தருகிறது. ஸுபத்ரா! நீ என்னை எவ்வளவு கடிந்து பேசியபோதிலும்,

உனக்காக இவ்வளவு கஷ்டப்பட்டு வந்திருக்கும் யான், உன்னை அடையாது விடேன் : வீணாக பிடிவாதம் பிடிக்காதே ?

ஸு : அடே ! பாபி !—சண்டாளா !—த்ரோகி !—பாதகா !—இம்மாதிரி எவ்வளவு யோகிகள் புறப்பட்டிருக்கிறீர்கள் பெண் பிடிக்க ?

அர் : (தனக்குள்) ஆஹா ! இவளது மனவுறுதியே உறுதி ! இவள் கோபமானது கோடைகாலத்தக்னிபோல் விருத்தியாகிறது ! ஆகவே, இனி இவளைப் பரீக்ஷிக்கலாகாது.—ஸுபத்ரா—என் கண்ணே !—

ஸு : சீ ! மூடமே !—கண்ணே !—யாரைப் பார்த்துக் கண்ணே யென்கிறாய் ?

அர் : கோபியாதே ! உன் மனவுறுதியை அறிந்துகொள்ளவே இவ்வாறு ஸம்பாஷித்தேன் ; நான்தான் உன்னால் வரிக்கப்படும் அர்ஜுனன் ; என்னை நன்றாய்ப் பார் ?

ஸு : ஹும் ! இதுவொரு ஸாமர்த்தியமா !—அடே ! என் நாதன் காலடி. மிதித்தவர்களுக்குக்கூட இவ்வெண்ணம் ஜனிக்காதே !

அர் : (தனக்குள்) நமக்கு வேண்டியதுதான், இம்மஹா உத்தமியை பரீக்ஷிக்க எண்ணியதற்கு ?—கண்ணே, ஸுபத்ரா ! நான் சொல்வது ஸத்யம் ; நானுன்னை பரீக்ஷை செய்ய வெண்ணங் கொண்டது தவறுதான் ; என்னை மன்னிப்பாய்.

ஸு : ஹும் ! இதையெல்லாம் நம்பி ஏமாந்து போகிறவள் நானன்று !

அர் : ஸுபத்ரா ! என்னை நான்றாய்ப் பார்.

ஸு : உன்னை உற்றுப் பார்க்கிறவர்கள் பார்க்கட்டும் ; நானேன் பார்க்கிறேன் !

அர் : ஸுபத்ரா ! (வலது கையை நீட்டி) இதோ பார், பாணத்தால் அழுத்தப்பட்ட வடுக்கள்.

ஸு : அதற்கென்ன ! க்ஷத்திரியன் என்றிருந்தால் எவருக்குமிருக் கிறது ஸகஜம்தானே !

அர் : ஸுபத்ரா ! இது போகட்டும் ; என்னைப்பற்றி வர்ணிக்கக் கேட்டிருப்பாயே, அதிலும் யான் பின் னழகனென்று ? அதைக்கொண்டாவது நீ தெரிந்துகொள்வாய்.

ஸு : அதற்கென்ன ! அவரைப்போல் சற்றேறக்குறைய வேறொரு வர் இருந்தாலும் இருக்கலாம் ; அதனுல் ?

அர் : (தனக்குள்) ஏது ! இவள் நம் வார்த்தையை இனி நம்பவே மாட்டாள்போ லிருக்கிறதே !—ஸுபத்ரா ? என் இடது கை விரலிலிருக்கும் வடுவையாவது பார் : இடது கையால் பாணம் விடக்கூடியவன் அர்ஜுனனைத் தவிர வேறு யாரிருக்கிறுர்கள் இவ்வுலகில் ?

ஸு : ஏனிருக்கலாகாது ?

அர் : ஸுபத்ரா ! என்ன இது ! இவ்வேஷத்தைத் தரிக்கச்செய்தவர் கிருஷ்ணனே ! அவர் தைர்யமில்லாவிடில், இக்கன்யா மடத் திற்குள் வர எவனுவது துணிவனு ?

ஸு : துணியமாட்டார்கள்தான் : ஆனுல்:—

“ कामातुराणां न भयं न लज्जा ”

(காமாதுராணும் ந பயம் ந லஜ்ஜா) என்பதுபோல்—

அர் : ஹா ! ஸுபத்ரா ! நானுன்னை பரிக்ஷித்த அபராதத்திற்கடை ந்த அவமானம் போதும் ; நான் அர்ஜுனனென்று எவ்வித ப்ரமாணங்கள் வேண்டினும் செய்து தருகிறேன்.

ஸு : (தனக்குள்) என்ன இது ! நானெவ்வாறு இவரை நம்பு வது ?—உம், தாங்கள் சொல்வது ப்ரமாணமாயிருக்கும்பக்ஷத் தில், என் அண்ணு முதலியவர்கள் திரும்பி வரட்டும் ; வந்த தும்—

அர் : ஐயோ ! உன் முத்தண்ணு வருமுன், உன்னை இவ்வூரைவிட்டு எடுத்துச்செல்ல உத்திரவளித்திருக்கிறுரே கிருஷ்ணன்.—

ஸு : அப்படியாயின், உங்களால்தான் நினைத்தமாத்திரத்தில் கிருஷ்ண அண்ணுவை வரவழைக்க முடியுமே: அவரை மாத்திரம் இப்பொழுது—

அர் : ஸரி : அப்படியே செய்வோம்.

[இருவர்களும் கிருஷ்ணனை ஸ்தோத்திரஞ்செய்ய கிருஷ்ணன் ப்ராப்தம்.]

கிரு : ஸுபத்ரார்ஜுனு ! யாதுகாரணம்பற்றி என்னை ஸ்மரித்தீர்கள் ?

அர் : கிருஷ்ணு ! எனக்கிந்த வேஷத்தைப் போட்டுவிட்டீர்கள் ; என் தாடியையும், மீசையையும் கண்டு ஸுபத்ரை பயப்படுகிறுள்.

ஸு : அண்ணு ? எனக்கு முன்பே சொல்லக்கூடாதா ! நான் மஹத்தான அபசாரம் செய்துவிட்டேனே ?

கிரு : என்ன ?

ஸு : வாயில் வந்தபடியெல்லாம் ஏகதேசமாய் பேசிவிட்டேன்.

கிரு : (புன்சிரிப்புடன்) அர்ஜுனு ! அப்பேர்ப்பட்டவள் உனக்கெதற்கு ?

அர் : அவ்வளவும் என்னுல் வந்ததுதான் : அவள்பேரில் குற்றமில்லை.

கிரு ஸரி : நான் வரவா ?

அர் : கிருஷ்ணு எங்களுக்கனுமதி கொடுத்து, தாங்களே—

கிரு : எதற்கு ? நாளைக்கு ஸாக்ஷிக்கோ ? ஸரிதான் : உம்—ஏன் : காந்தர்வ முறைப்படி நடக்கட்டும்.

[இருவரும் மோதிரம் மாற்றிக்கொண்டு கிருஷ்ணனை நமஸ்கரிக்க]

தீர்காயுஷ்மான் பவ : தீர்க்க ஸுமங்கலி பவ.—ஸுபத்ரார்ஜுனு ? திருப்திதானே ?

அர் : எல்லாமுமது கிருபை.

கிரு : ஸரி : நான் வருகிறேன் : நாளையதினமே நாங்கள் இங்கு திரும்பிவிடுவோம் ; துர்யோதனனும் பரிவாரங்களுடன் இன்று இவ்வூரெல்லையில் வந்து தங்கியிருக்கிறான் ; ஆகவே, நீ இனி அரைக்ஷணமேனும் இங்கிருக்கக் கூடாது ; ஸுபத்ரையை எடுத்துச்செல் இந்திரப்ரஸ்தத்திற்கு.

அர் : அப்படியே.

[கிருஷ்ணன் மறைகிறார்.]

ஸு : நாதா என்னை மன்னிக்கவேண்டும் ; பெருத்த அபசாரம் செய்துவிட்டேன்.

அர் : கண்ணே ! அத்திரத்தன்மையான வார்த்தைகளைக் கேட்டு ஆநந்திக்கவேதான் நான் அவ்வாறு ஸம்பாஷித்தேன் : ஆகவே, எனக்குச் சிறிதேனும் வருத்தமென்பதில்லை. ப்ரியஸுந்தரி ! எனக்கொரு முத்தமளிப்பாய். (அவளை அணைத்து முத்தமிட எத்தனிக்க, அவள் லஜ்ஜையால் முகத்தைத் திருப்ப, வலிந்து முத்தமிடுகிறான்.)

ஸீன் 4.

இடம் :—கோட்டை வாயில்.

[இரண்டு பாராக்காரர்கள் பாராக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.]

மு. பா : தம்பி ! நம்ப மவராசா உச்சவத்துக்குப் போனதுமுதல் இதுவரைக்கும் உஷாராகக் காப்பாத்தி வந்துவிட்டோம் : இன்றை இரவையும் சாக்கிறதையாய் தள்ளிவிட்டால், நாளைக்கு அவங்கயெல்லாம் வந்துடுவாங்க, பிரகு நமக்கு அவ்வளவா சிரமம் இராது.

இ. பா : ஆமாமண்ணே ! இத்தனை நாள் விழித்திருந்தது பெரிசாகத் தோணலே ; இன்னைக்கி, என்னமோ, (கொட்டாவி விடுகிறான்) அடி அம்மா—கண்ணைக்கண்ணை அமுட்டுது அண்ணே !

மு. பா : அட ! எனக்கென்னவோ ஒருநாளுமில்லாமே இன்னைக்கு நிக்கக்கூட முடியாமே தள்ளுதே இன்னு நினைச்சு, ஒரு

வேளை நம்மறியாதே, தூங்கிட்டா என்னசெய்வது இன்னு உன்னை உசார் படுத்தினு, நீ எனக்குமேலே இருக்கையே!

இ. பா: அதென்னமோ அண்ணே! (கொட்டாவி விட்டு) என்னுலே நிக்கமுடியாது போவிருக்கு (சொல்லிக்கொண்டே உட்காருகிறுன். மறுபடியும் கொட்டாவி விடுகிறுன்.)

மு. பா: தம்பி! ஒண்ணு செய்வோம்:—நீ ஏதாவது ஒரு பாட்டுப் பாடு; தூக்கம் கலேஞ்சு போயிடும். (உட்காருகிறுன்)

இ. பா: ஆமாம் அண்ணே! அதான்சரி! என்னு பாட்டு பாடட்டும்!

மு. பா: ஏதாவது, ஒரு தில்லானு, டப்பா, பாடேன்.

இ. பா: (பாடுகிறுன்: முதல் பாரா அதை ஸ்வாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டு தலேயை அசைக்கிறுன்; பாட்டு முடிவதற்குள், அவனுக் கும் கொட்டாவி அடிக்கடி ஏற்பட்டு மெல்ல சுவரில் சாய்கிறுன்) அடடே! என்னைச் சொல்லீட்டு நீ தூங்க ஆரம்பிச்சுட்டையே!—அண்ணே!—அண்ணே! தூங்காதே.

மு. பா: ஆ!—(விழித்துக்கொண்டு) அட! தூங்கீட்டேனு என்ன! (கொட்டாவி விடுகிறுன்)

இ. பா: அண்ணே! நீ ஒரு பாட்டுப் பாடினேயின்னு, தூக்கம் போயிடும்: பாடு?

மு. பா: (பாடிக்கொண்டிருக்கையில், அவன் தூங்கவாரம்பிக்கிறுன்) அடடே! நீ தூங்கிறயே!

இ. பா: (விழித்துக்கொண்டு) இன்னைக்கு என்ன அண்ணே, இப்படி சோதனை பண்ணுது!

மு. பா: தம்பி! ஒண்ணு செய்வோம்: ரெண்டு பேர்களும் பாடுவோம்.

இ. பா: ஸரி! என்ன பாட்டு பாடரது?

மு. பா: தெம்மாங்கு பாடுவோம்.

இ. பா : ஸரி : ஆரம்பிச்சுக்கோ நீ மொதல்லே.

[இருவரும் பாடுகிறார்கள் ; இடையிடையே கொட்டாவிகள் விடுகிறார்கள் ; சற்று நேரத்திற்கெல்லாம், தூக்கக் கலக்கத்தால் கண்களை மூடியவண்ணம் பாட்டில் தடுமாற்றம் ஏற்படுகிறது ; கடைசியில் இருவரும் சற்று அயர்ந்து விடுகிறார்கள் ; அச்சமயம் இடையில் ஸ்வப்னாவஸ்தையால் பாடுகிறார்கள் : அர்ஜுனன் ஸுபத்ரையைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு மெல்ல கதவைத் திறந்து வெளியே போய்விடுகிறான் : கதவு திறந்த சப்தத்தால் ஒருவன் கண்விழித்து திடுக்கிட்டு எழுந்து கோட்டை வாயிற் கதவு திறந்திருப்பதைப் பார்த்து திகில் அடைகிறான்.]

மு. பா : அடடே ! தம்பி ! எழுந்திருடா ! எழுந்திருடா !

இ. பா : (திடுக்கிட்டு எழுந்து) என்ன, என்ன, என்ன ?

மு. பா : அடே ! யாரோ வெளியே போயிருக்காப்போலே இருக்கடா ! யாரோ திருடன் போவிருக்கடா.

இ. பா : உள்ளே எங்கே அண்ணே திருடன் ! யாரோ திருடன் உள்ளே போயிருக்கணம் : வா அண்ணே உள்ளே ?

மு. பா : அட என்ன புத்திசாலீடா நீ ! உட்பக்கம் தாளிட்டிருக்க உள்ளிருந்து வெளி வந்திருப்பாங்களோ ? வெளியிருந்து உள்ளே போயிருப்பாங்களோ ? தம்பி ! எல்லாத்துக்கும் : நீ இங்கேயிரு : நான் போய் பாத்தூட்டு வறேன். (ஓடுகிறான்)

இ. பா : உள்ளே எப்படிப் போவான் திருடன் ?—அரண்மனேயிலே வேறொருவரும் இல்லேயே, அந்த சாமியாரும் ஸுபத்ரை அம்மாவும் தவிர ? என்னடாது இவ்வளவுநாள் சாக்கிறதையாயிருந்தூட்டு, கடசி நாளிலே இப்படி மோசம் போய் விட்டதே ! ரெண்டு பேருக்கும் ஒரே நேரத்திலே தூக்கம் வறது இன்னு இதிலே என்னமோ சங்கதி இருக்கணும் இன்னு தோணுது எனக்கு ? எவனே மை வேலே செஞ்சிருக்கான். இல்லாட்டி இப்படியா கண்ணே அமுட்டும் :—

[முதல் பாரா அர்ஜுனனால் அடிக்கப்பட்டு ஓடிவருகிறான்.]

மு. பா : (அடியாலும், ஓடிவந்ததாலும், மேல் மூச்சு விட்டவண்ணம்) தம்பி ! மோசம் வந்திட்டுச்சடா !

இ. பா : என்ன அண்ணே ?

மு. பா : அடே! அந்த சாமி, திருட்டுச்சாமீடா !—என்ன அடி, அடிச்சுட்டாண்டா சவுக்கெடுத்துக்கொண்டு—

இ. பா : சாமிக்கு என்ன ?

மு. பா : நம்ப ஸுபத்ரை அம்மாவை தூக்கிக்கிட்டு, நம்ப சின்ன மஹாராஜா ரதத்தைப்பூட்டிக்கிட்டு அதில் ஏறினுன் : நான் அப்பொழுது அங்கு போயிட்டேன் : யாரடாது இன்னு அதட்டி மரைச்சுகிட்டேன் : அப்போ—ஐயோ—அப்பா—குடுத்தான்பார் : (அழுதுகொண்டு) சவுக்காலே ! அட அப்பா : முதுகைப்பாரடா ! (முதுகைக் காட்டுகிருன்)—

இ. பா : என்ன அண்ணே : என்னைக் கூப்பிடப்படாதா அப்போ ?

மு. பா : ஏன் உன் முதுகும் ஊருகிறதோ ?—அடே அவன் திருட்டுச்சாமீடா. வில்லு கில்லெல்லாம் வச்சிருக்காண்டா : யாரோ வீரன்போலிருக்கடா : நல்லவேளையா கும்பிருட்டாய் இருந்ததனுலே, நான் தப்பிச்சு ஓடிவந்துட்டேன்.

இ. பா : ஐயயோ என்ன அண்ணே : மவராசா வந்தாக்கே நம்மை கொன்னு விடுவாங்களே.

மு. பா : அடடே ! மறந்தேண்டா !

இ. பா : என்ன ?

மு. பா : அதான், துர்யோதன மவராசா சைன்யங்களுடன் வந்திருக்காங்களே கல்யாணத்துக்கு அவங்ககிட்ட ஓடிப்போய் சொல்வோம் வாடா.

இ. பா : ஆமாமாம் : நானும் மறந்துட்டேன் : அவங்களுக்குத்தானே இப்பொ அக்கரை சாஸ்த்தியாயிருக்கணும் : அவங்களுக்கு பெண்சாதி ஆகப்போகிறவங்களைத்தானே இந்தப் பயல் தூக்கிக்கிட்டுப் போரான் : வா அண்ணே ; ஓடுவோம் :

[இருவரும் அதிவேகமாகப் போகிருர்கள்.]

ஸீன் 5.

இடம்—பலராமர் அரண்மனை.

[பாராக்காரர்களும், சில வீரர்களும் பின்தொடர பலராமர் மிகுந்த கோபாவேசத்தில் வருகிறார்.]

பல : ஆஹா! என்ன மோசம்! என்ன அக்ரமம்! என்ன அவமானம்! இவ்வர்ஜுனனுக்கு இவ்வளவு தைர்யமா! அடே! (ஒருவன் "மஹாராஜ" என்று கைகட்டி வாய்பொத்தி நிற்க) கிருஷ்ணனை அழைத்துவா அதிசீக்கிரம்.—

[அவன் போகிறான்.]

எல்லாவற்றிற்கும் இக்கிருஷ்ணன் ஒத்தாசை இருந்திருக்கவேண்டும் : இல்லாவிடில் இப்பயனுக்கு இவ்வளவு துணிவு வந்திராது.—

[கிருஷ்ணன் வருகிறார்.]

கிருஷ்ணு! என்ன அக்ரமம்! இந்தப்பயல் அர்ஜுனனென்று எனக்கு நீ முன்னமேயே சொல்லக்கூடாதா?

கிரு : எந்தப்பயல் அர்ஜுனன் என்கிறீர்கள்?

பல : ஆமாம்! பூலோகமோ, கைலாஸமோ என்பாய்?

கிரு : என்ன அண்ணு! நானிப்பொழுதுதான் இவ்வரண்மனை வாயிலில் வந்திறங்கினேன் : இறங்கினதும் தாங்கள் வெகு அவஸரமாக அழைத்ததாகக் கூறினர்கள் : உட்செல்லாமலே நேராக இங்கு வந்துகொண்டிருக்கிறேன். ஸமாசாரம் இன்னவென்று சொல்லாமலே, கோபிக்கிறீர்களே? நான் என்ன செய்வது— விஷயம் என்ன சொல்லுங்கள்.

பல : அர்ஜுனன்தான் ஸன்யாஸிவேஷந்தரித்து இங்கு வந்திருந்து, நாம் இல்லாத ஸமயம்பார்த்து, ஸுபத்ரையை எடுத்துச் சென்றுவிட்டான் : அதுவும் உன் ரதத்திலேயே ஏறிச்சென்றுனும் : இது விஷயத்தில் உன் உதவி யில்லாது இத்துணிவான காரியம் நடந்திருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை.

கிரு: என்ன அண்ணு! அபாண்டமான அபவாதத்தைச் சுமத்துகிறீர்களே என் தலையில்? நான் ஒவ்வொரு ஸமயங்களிலும் படித்துப்படித்துச் சொன்னேன் "இவன் ஏதோ கபட ஸன்யாஸி; இவனது பார்வைகளும், நடத்தைகளும் ஸரியாகத் தோன்றவில்லை" என்றேன். அப்பொழுதெல்லாம் என்னை அதட்டிவிட்டு, இப்பொழுது ஏமாந்ததுமன்றியில், என்மீது பழியையும் சுமத்துகிறீரே!

பல: (மிகுந்த கோபத்துடன்) ஏமாந்தேனு! இக்ஷணமே அவனை ஹதஞ்செய்கிறேன் பார். அவனுக்கிவ்வளவு துணிவா?

கிரு: ஹும்! "கோழியையடிக்கக் குறுந்தடி வேண்டுமா"—அவனை எதிர்க்கத் தாம் எதற்குப் போகவேண்டும்; துர்யோதனன் தான் பரிவாரங்களுடன் வந்திருக்கிறுனே! அவனுக்கு ஸமாசாரம் அனுப்பினுல் போதுமானது—

பல: அதை என் கேட்கின்றுய் மானக்கேட்டை! இவன் ஸுபத்ரையை எடுத்துச் செல்வதை யறிந்த நம் காவலர்கள் உடனே ஓடி துர்யோதனனிடம் முறையிட, அவன் ஸைன்யத்துடன் அந்தப் பயலை எதிர்க்க, அவன் ஏகாங்கியாய் நின்று அனைவர்களையும் முறியடித்துச் சென்றுவிட்டானும்; அந்த அவமானம் பொறுக்கமுடியாது, துர்யோதனன் ஹஸ்தினுபுரம் போய் விட்டானும். கிருஷ்ணு! அர்ஜுனனை எதிர்க்க ஸாமான்யப் பட்டவர்கள்—

கிரு: அது போகட்டும்: நானிருக்க தங்களுக்கேன் சிரமம்? இதோ, ஒரே பாணத்தால் அவனைக் கட்டி தங்களிடம் கொண்டுவருகிறேன்; தங்கள் எதிரிலேயே அவனை சித்திரவதை செய்கிறேன்.

பல: அடபாபி! உனக்கெவ்வளவு நமஸ்காரங்கள் செய்தேனடா!

கிரு: நீங்கள்மாத்திரமா? நானெவ்வளவுசெய்தேன் உங்களுக்காக?

பல: கிருஷ்ணு! இப்பொழுதே புறப்படு: அப்பயலை நீ கூறியபடி சித்திரவதை செய்தாலன்றி என் மனம் ஆருது!

கிரு : இதோ !—ஆனல், அண்ணு ! அதில் ஒரு விஷயமல்லவா அஸந்தர்ப்பமாகவிருக்கிறது.

பல : என்ன ?

கிரு : அவனே ஸுபத்ரையை காந்தர்வ மணம் புரிந்துவிட்டான். ஆகவே, அவனைக் கொல்வோமாகில், ஸுபத்ரையின்கதி— பெரிய துக்கமல்லவோ வந்துவிடும்.

பல : ஆம், கிருஷ்ணு ! மறந்தேன் !—ஐயோ இந்த அவமானத்திற்கென்ன செய்வது ?

கிரு : என்ன அவமானமிதில் ? ஸுபத்ரைக்கோ மனப்பூர்வமாய் அவனை மணக்க இஷ்டம் ; அப்படியிருக்க, அவர்களை இங்கழைத்துவந்து எதோக்தமாய் விவாஹத்தை நடத்திவிட்டாலாச்சு.

பல : துர்யோதனனுக்களித்த வாக்குத்தத்தம் என்னவாவது ?

கிரு : என்னவாவது ; அவனேதான் இதை அறிந்து, அவனை எதிர்த்து புறங்காட்டி ஓடிவிட்டானே : இனிமேல் ஏன் இதைப்பற்றிப் பேசுகிறன் ?

பல : கிருஷ்ணு உன்னையறியாது ஒன்றும் நடந்திராது ; எனக்குத் தெரியும் : ஆயினும், என்னிடம் முன்பே சொல்லக்கூடாதா, அர்ஜுனனுக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று ?

கிரு : நன்றாயிருக்கு ! அப்பொழுது சொன்னல் என் பேச்சு ஏறுமா? மேலும் உங்களுக்கும் துர்யோதனன் யோக்யதை தெரிய வேண்டாமா ?

பல : ஸரி : க்ருஷ்ணு ! உடனே தூதனை அனுப்பி அர்ஜுனனையும் ஸுபத்ரையையும் இங்கு அழைத்துவரச்சொல் : ஒரு முகூர்த்தம் பார்த்து பாண்டவர்களுக்கு திருமணவோலை அனுப்பி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்.

கிரு : அப்படியே.

[போகிறர்.]

ஸீன் 6.

இடம் :—விவாஹ மண்டபம்.

[அர்ஜுனன், ஸுபத்ரை, பலராமர், கிருஷ்ணன், ருக்மணி, ரேவதி, த்ர்மபுத்ரர், தாஸிகள், குரு, முதலியவர்கள் இருக்கிறார்கள்.]

[விவாஹம் நடக்கிறது; ருக்மணியும் ரேவதியும், ஆலத்தி எடுக்கிறார்கள்.]

மங்களம்.

ஸுபத்ரார்ஜுனா
முற்றிற்று.

யதார்த்தவசனீ அச்சியந்திரசாலை, கும்பகோணம்.